உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை.

---

## எட்டாந்தொகுதி.

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

மதுரைத் தமிழ்ச் சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

பத்திராசிரியர்—மு. இராகவையங்கார்.

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

---

1909—1910.

# “செந்தமிழ்” எட்டாந்தொகுதியின்

# உள்ளுறை.

---


அருச்சுனனும் பாண்டியமரபும்:—பத்திராசிரியர். சஎகூ.

அவுரங்கஸீப் தர்பாரில் ஒரு பண்டித சிரோமணி:— } ஸ்ரீமத்-வி. சுப்பிரமணியஐயர். ருசுஎ

ஆங்கில மொழிக்கலப்பு:—ஸ்ரீமத்-அ. பொன்னையாபிள்ளை. கஉக.

இந்திய அரசர் போர் வீரம்:—ஸ்ரீமத்-சி. கணேசையர். ருகூகூ.

இந்தியா இறை மாட்சி:— } ஸ்ரீமத்-எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர். [உஎ, எரு, கஉச.

இராமாவதாரச்செய்யுட் பாடாந்தரம்:—ஸ்ரீமத்-சி. கணேசையர். கூக.

இருகண்ணொருமணி:—ஸ்ரீ-மத்-சி. கணேசையர். ஙஉஎ.

உள்ளத்துணர்வு:—ஸ்ரீமத்-இராமசாமிவன்னியர். கசுகூ, ககூக.

உள்ளத்தெளிவு:—ஸ்ரீமத்-இராமசாமிவன்னியர். உருஅ.

ஐந்திணைமாக்கள் பூர்வவரலாறு:—ஸ்ரீமத்-Y. S. டேலர் போதகர். [சருஎ.

ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது பாடிய வரலாறு:— } ஸ்ரீமத்-சி-கு. நாராயணசாமி [முதலியார். ககூ.

ஓர் ஆசங்கை:—ஸ்ரீமத்-இராமநாதச்செட்டியார். ருஉஉ.

கதாசரித்சாகரம்:—ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்கார். கரு, சுகூ, கருச. [உஙஅ, உஎக, ஙசச, சசக, ருசக, சுக0,

கம்பர் மதம்:—ஸ்ரீமத்-மு. வேங்கடசாமி நாட்டார். சரு0.

கம்பளிப் பூச்சியைப்பற்றிய குறிப்பு:— } சென்னைவிவசாயசங்கத்தார் சஙஉ.

கம்போடியாபருத்தி:— { ஸ்ரீமத்-B. V. இராமகிருஷ்ணையர். ங0அ.
சென்னை விவசாயசங்கத்தார். சஉஎ.

கரவைவேலன்கோவை:—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. ௨௧௯, [௨௯௬, ௩௩௬, ௪௩௫.
கல்வி:—ஸ்ரீமத்-முத்துரத்தினமுதலியார். ௩௮௫.
கலிங்கத்துப்பரணியாராய்ச்சி:—பத்திராசிரியர். ௫௩௪.
சங்கீதசாஸ்திரம்:—இசைத்தமிழன். ௫௧௫.
சானசுருதியரசன் கதை:—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. ௬.
சிதம்பரசுவாமிகள் சரிதம்:—ஸ்ரீமத்-சி. கு. நாராயணசாமி [முதலியார். ௪௧, ௮௪.
சிலகேள்விகட்கு விடை:— ஸ்ரீமத்-எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர். [௨௦௭.
சிலதனிப்பாக்கள்:—ஸ்ரீமத்-அ. சிதம்பரமுதலியார். ௫௨௩.
சிவராத்திரிபுராண அரும்பத விளக்கமும் பாடபேதமும்:— ஸ்ரீமத்-சே. ரா. சுப்பிரமணியக் [கவிராயர். ௬௨௩.
சிறுவர்க்குரிய உபந்யாஸங்கள்:— ஸ்ரீமத்-வீ. சுப்பிரமணிய ஐயர். ௧௮௪, [௨௩௦, ௩௧௫, ௩௫௫, ௩௯௭.
சுக்ரநீதி:—ஸ்ரீமத்-வி. ஸ்ரீநிவாஸாசாரியர். ௪௦௯, ௪௭௪, ௪௯௯.
செல்வமில்லாமை:—P. G. ௨௫௪.
சேதுபுராண அரும்பத விளக்கம்:— ஸ்ரீமத்-ஆ. மூ. சோமாஸ்கந்தபிள்ளை. [௧௬௪, ௧௯௬, ௨௭௯, ௪௫௨.
சோதிடகணிதம்:—ஸ்ரீமத்-சோமசுந்தர தேசிகர். ௬௫, ௧௪௭, ௨௧௫, [௨௬௧, ௩௦௩, ௩௬௩.
தணிகைப்புராண அருஞ்செய்யுள் விளக்கம்:— ஸ்ரீமத்-ஆ. மூ. சோமாஸ்கந்த [பிள்ளை. ௫௭௨.
தமிழ்ச்சங்கமும் ஈழநாடும்:—ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. ௫௦௧.
தமிழ்ச்சொற் பிரயோக விவேகம்:— ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை. ௬௩.
தமிழ்நாட்டில் வழங்கும் கண்ணபிரான்சரிதங்கள்:— பத்திராசிரியர். ௧௭௧.
தமிழர் சீனரா?:—ஸ்ரீமத்-ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை. ௬௩௮.
தஸ்யுக்களும் திராவிடர்களும் சுதேசமித்திரன்:— ஸ்ரீமத்-மஹேசகுமார சர்மா [மொழிபெயர்ப்பு. ௬௩௧.

திணைமயக்கம்:—ஸ்ரீமத்-சி. கணேசையர். ககரு

திருக்குறட்பரிமேலழகருரை விளக்கம்:— } ஸ்ரீமத்-சி. கணேசையர். சஅகூ.

திருக்குறளாராய்ச்சி:—ஸ்ரீமத்-அ. கோபாலையர். சஎ, கஙஉ, உஉரு, [உஅஅ.

திருவலஞ்சுழி:—ஸ்ரீமத்-தி. ப. சுப்பிரமணிய ஐயர். ருருஎ.

தொல்காப்பியத்துக்கண்ட பழைய வழக்குகள்:— } பத்திராசிரியர். ஙஎரு, சஉங, [ருகூரு.

நமதுபுராதன நாகரீகம்:—Mr. M. P. மாஸ்கரன்ஹாஸ். ஙஉகூ.

நமது பூர்வகாலக் கப்பற்றொழில்:—ஒற்றன் ருசகூ, சுசஉ.

நல்லைவெண்பா:—ஸ்ரீமத்-ச. கந்தையபிள்ளை. சகூச.

நல்லொழுக்கம்:—ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள். ஙசு, கரு0, [உ00, உரு0, உஅச, ஙருங, ச0ச, சசுசு.

பக்தி:—ஸ்ரீமத்- G. V. கோபாலசாமி நாயடு. சு0ங.

பத்திராசிரியர் குறிப்பு:— உகூஉ.

பாடசாலை:—ஸ்ரீமத்-தி. சதாசிவ ஐயர். ஏசஎ.

பிரமதேவரும் திருவள்ளுவரும்:—பத்திராசிரியர். ருஙகூ.

புத்தகக் குறிப்பு:—பத்திராசிரியர்.:—ருஅ, கக0, உசுகூ, சககூ, [சஎஎ, ருஙஎ, சுருஉ.

புறத்திரட்டிற்கண்ட பாடல்கள்:—பத்திராசிரியர். உ0கூ.

பெரியபுராண அரும்பத விளக்கம்:— } ஸ்ரீமத்-ஜி. சதாசிவம்பிள்ளை. ருரு, கூசு, [ஙஉ0, ஙஎக, சகங.

போகத்தியம்-வடபதப்படலம்:— பத்திராசிரியர். சஅக.

பொருள்கோடல்:—ஸ்ரீமத்-சி. கணேசையர். உசுஎ.

மதுரைநாயக்கர் ஸமஸ்தானம்:— } ஸ்ரீமத்-சே. ப. நரசிம்மலுநாயடு. ருஅஎ, சுகஎ.

மதுவிலக்கு:—Rev. M. P. மாஸ்கரன்ஹாஸ். ருஉச, ருஎகூ.

மாதவிவாதம்:—ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளை. கஅக.
மிளகு:—சென்னை விவசாய சங்கத்தார். சஉகூ.
மூத்தமிடலின்வரலாறு:—ஸ்ரீமத்-வீ. சுப்பிரமணியஐயர். ருΟஎ.
மூவகையான்மாக்க விலக்கணம்:— ஸ்ரீமத்-சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர் கΟஉ. ஸ்ரீமத்-சோமசுந்தரதேசிகர். சகூஉ.
மேகஸந்தேச பரிசீலனம்:—ஸ்ரீமத்-எம். துரைசாமிஐயங்கார். கஙஎ.
வடமொழி வியாகரணத்திற்கண்ட சில சரித்திரக் குறிப்புகள்:— (Late) கு. ஸ்ரீநிவாசசாஸ்திரிகள். உசரு.
வியாழமண்டலம்:—P. G. சுசஅ.
விவசாயக்குறிப்புகள்:—சென்னை விவசாயசங்கத்தார். ருகச.
விவசாயிகளால் ஆளப்படும் டென்மார்க்குதேசம். "சுதேசமித்திரன்" ஙகூங.
வேள்புலம்:—பத்திராசிரியர். ருகூ.
ஜப்பானில் பாய்பின் னுதற்றொழில்:— ஸ்ரீமத்-வீ. சுப்பிரமணிய ஐயர். கΟ.
ஸ்ரீ இருந்தவளமுடையார்:—பத்திராசிரியர். ககக.
ஸ்ரீசங்கராசாரியசுவாமிகளது மணிரத்தினமாலை:— ஸ்ரீமத்-சோமசுந்தரதேசிகர். ஙஎகூ.
ஸ்ரீமாந்- காந்தியும் தமிழர்களும்:—'சுதேசமித்திரன்' உகச.
ஸ்ரீவால்மீகருந் தமிழ்வழக்குகளும்:—பத்திராசிரியர். க.

---

## "செந்தமிழ்" எட்டாந்தொகுதியில் வெளிவந்தநூல்கள்.

[முடிந்தது.]

ஞானமிர்தக்கட்டளை:—ஸ்ரீமத்-சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர். [பகுதி எ, அ, கூ, கΟ.

[முடியாதவை.]

அகப்பொருள் விளக்க மூலமுமுரையும்:— ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைத்தேவர். [பகுதி உ, ச, ரு, அ, கக.
சங்கரசோழனுலா:—பத்திராசிரியர். பகுதி க, ங, ரு, எ.

---

உ

## மாட்சிமைதங்கிய

# எட்டயபுரம் அரசரவர்கள்

## இச்சங்கத்திற்குதவிய

## நன்கொடை.

மாட்சிதங்கிய எட்டயபுரம் ராஜா அவர்கள், 13—12—09-ல், இந்நகர்க்கு விஜயஞ்செய்திருந்தபோது, [நம் அக்கிராசனாதிபதியவர்கள் விருப்பத்தின்படி,] இம்மதுரைத் தமிழ்ச்சங்கத்தைப் பெரிதும் அபிமானித்து அதற்கு நன்கொடையாக ரூ 3500-ம், மாதந்தோறும் ரூ 10-ம், தங்கள் ஸம்ஸ்தானத்தினின்று அளிக்கும்படி அன்புகூர்ந்து கையொப்பமிட்டார்கள். இவ்வரிய உதவி, அவ்ராஜா அவர்களது தமிழபிமானத்திறத்தை நன்குவிளக்கத்தக்கதாம். இங்ஙனமே; ஏனைய தமிழ்த்தலைவர்களும், பிரபுக்களும் இச்சங்கத்தை அபிமானிக்க முன்வருவார்களாயின், நம்பாஷை பெரிதும்வளர்ந்து செழிக்கத் தடையேயிரா. இவ்வாறு, நம்சங்கத்தை ஆதரிக்க முன்வந்த எட்டயபுர அரசரவர்களைத் தமிழகம் உள்ளன்புடன் நன்றிகூறிவாழ்த்துமென்பது திண்ணம்.

பத்திராசிரியர்.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-அ.] சௌமிய-ௗ கார்த்திகை மீ [பகுதி-க.

## ஸ்ரீவால்மீகருந் தமிழ்வழக்குகளும்.

யான் முன்பெழுதிய "ஸ்ரீவான்மீகருந்தென்னாடும்" என்ற வியாசத்தில், தமிழ்நாட்டியல்புகளும், இடைச்சங்கத்துக் கபாடபுரம் முசிரி என்ற பழைய பட்டினங்களும் வான்மீகத்தில் குறிக்கப்பட்டிருத்தலை விவரித்தேன். இனி, அவ்வான்மீகிமுனிவர் வாக்கால் தமிழ்வழக்குகள் சிலவற்றினுண்மை தெரியவருதலை இவ்வியாசத்துக் காட்டுவேன்.

க. வடக்கிருத்தல்:—இவ்வழக்கினைப் புறநானூற்றில், "மறத்தகை மன்னன் வாள்வடக்கிருந்தனன்"(சுஙு) "புறப்புண்ணாணி வடக்கிருந்தோனே" (சுசு) என வருதலால் அறிக. வடக்கிருத்தலாவது-உலகவின்பத்தை முற்றும் வெறுத்துப் பட்டினிகிடந்து உயிர்துறத்தலாம். இதனை "பிராயோபவேசவிரதம்" என்பர் வடநூலார். சங்கநாளில், இவ்விரதம், அரசராலும் புலவர்களாலும் கொடியதுக்க காலங்களில் நிகழ்த்தப்பெற்றது. சேரன் பெருஞ்சேரலாதன் என்பான், சோழன் கரிகாற்பெருவளத்தானோடு போர்செய்து முதுகிற் புண்ணுற்று அதற்கு நாணி, வடக்கிருந்தான். கோப்பெருஞ்சோழன், தன்மேற் பகைகொண்ட தன் மக்களிருவரோடும் போர்க்கெழுந்தகாலத்தில், புல்லாற்றூர் எயிற்றியனார் என்னும்புலவரால் சமாதானஞ்செய்யப்பட்டுத் தன்னரசை அவர்கட்களித்துத் தான் வடக்கிருப்பானாயினன். அக்கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்த செய்தி கேட்டு அவனுருயிர் நண்பர்களாகிய, பிசிராந்தையார், பொத்தியார் என்ற புலவர்களும் அவ்விரதம்பூண்டனர். அம்மட்டோ! தம்முயி

ரினுஞ்சிறந்த வேள் - பாரியின் பெரும் பிரிவுக்காற்ருது புலவர் பெருமானுகிய கபிலரும்,

"மலைகெழு நாட மாவண் பாரி
* * *
இம்மை போலக் காட்டி யும்மை
யிடையில் காட்சி நின்னே
டுடனுறை வாக்குக வுயர்ந்த பாலே."

என்று இரங்கக்கூறி, வடக்கிருந்து உயிர்நீத்தனர். வடக்கிருத்த லென்பது இங்ஙனம் பட்டினிகிடந்து உயிர்நீத்தலேயென்பதை அவ் விரதம்பூண்ட கோப்பெருஞ்சோழனைப் பூதநாதனுர் என்ற புலவர்,

"உள்ளாற்றுக் கவலைப் புள்ளி நீழன்
முழூஉ வள்ளூர முணக்கு மள்ள
புலவுதி மாதோ நீயே
பலரா லத்தைநின் குறியிருந் தோயே." *

என்று பாடுதலானு முணர்க.

இத்தகைய அரியவிரதம் தற்கொலையாகாது சநாதன தர்மங்க ளில் ஒன்ருக அக்காலத்திற் கருதப்பட்டது. இராமாயணத்தில், அங்கதன், பிராட்டியை எங்குந்தேடியுங் காணுமையால் மற்றவான ரர்களோடு உயிர்துறக்கத்துணிந்து, பின், தண்ணீர்குடித்துவிட்டுப் பூமியில் தெற்குமுகமாகப்பரப்பிய தருப்பையின்மேல் கிழக்குநோக் கியிருந்துகொண்டு பிராயோபவேச விரதம் பூண்டான்—என்று கிஷ்கிந்தாகாண்டம் ருஃ-ம் சருக்கத்திற் கூறப்படுகின்றது. ஆனுல், "வடக்கிருத்தல்" என்னுந் தமிழ்வழக்குக் கேற்றசொல் வடமொழி யிற் காண்டலரிதாயினும், அவ்விரதம்பூண்டோர் தம்மூர்க்கு வடதி சையிற் சென்று அதனைச்செய்தல் மரபென்று கருதத்தக்கது; என் னை? புண்ணியதிசையாகிய வடக்கே எல்லாச் சற்கருமங்கட்கும் ஏற் றவிடமாதலாலென்க. ஸ்ரீ ராமபிரான் பிரிவுக்காற்ருத அயோத்தி யாநகரத்து ஜனங்கள் கூற்ருக, வான்மீகிமுனிவர், இராமனுடன்

* இதன்பொருள்:—ஆற்றிடைக் குறையுள், புள்ளிகொண்ட மரநிழற் கணிருந்து உடம்பாகிய முழுத்தசையை வாட்டும் வீரனே! நின் கருத்திற் கேற்ப நின்னேடு வடக்கிருந்தார் பலராதலால், யான் இதற்குதவாது பிற் பட வந்ததற்கு என்னை நீ வெறுக்கின்ருய் என்பது.

செல்லற்கியலாத நாம் "இவ்விடத்தே உபவாசத்தால் உயிரைவிடுவோம். அன்றி, கீழேவீழ்ந்து இறக்கும்வரை வட. திசைநோக்கிச் சென்றுகொண்டிருத்தலாகிய மகாபிரஸ்தான விரதத்தை மேற்கொள்வோம்" என்று ஆயோத்தியாகாண்டம் சஅ-ம் சருக்கத்திற் கூறியிருக்கின்றார். இதனால், பட்டினிகிடந்துயிர்துறப்போர் வடதிசை சேறல் மரபென்பது தெரியவருதலின், வடக்கிருத்தல் என்னுந்தமிழ் வழக்குத் தெளிவாதல் காண்க. பட்டினிகிடந்து உயிர்நீக்கும் விரதத்தில், வடக்குமுகமாகச் சென்றுகொண்டே இறத்தலொன்றென்றும், இதற்கு மகாபிரஸ்தானமென்பது பெயரென்றும்; மற்றொன்று வடதிசையில் ஓரிடத்தில் தங்கி இறத்தலென்றும், இதற்கு வடக்கிருத்தல் அல்லது பிராயோபவேசம் என்பது பெயரென்றும் உணர்க.

உ. **மலையாத்திக்கோடி:**—சோழவரசர்க்கு ஆத்திமாலை உரித்தாகச் சொல்லப்பட்டுளது. இவர்கள் சூரிய வமிசத்தாராகவும், ஸ்ரீராமபிரானுடைய முன்னோர்களையே இவர்க்கு முன்னோராகவும் கூறப்படுதலைக் கலிங்கத்துப்பரணி முதலிய நூல்களால் அறிக. இச்சோழர்க்கு ஆத்தி சின்னமாகக்கூறப்பட்டிருத்தல் போலவே இராமவமிசத்துக்கும் ஆத்திச்சின்னங் கூறப்படுகின்றது. இதனை வால்மீகம், அயோத்தியாகாண்டம் அசு-ம் சருக்கத்தில், பரதனுடைய சைந்நியத்தைப்பார்த்துக் குகன் இக்ஷ்வாகு வமிசத்துச்சக்கரவர்த்திகளுடைய மலையாத்திக் கோடியுடன் கூடிய மகாரதம் (கோவிதாரத்துவசம்) ஈதோ தெரிகின்றது." எனக் கூறுவதால் உணர்க. இதனால், அவ்விக்ஷுவாகு வமிசத்தவராகச் சொல்லப்படும் சோழர்கள் தம் முன்னோர் கொடியாகக்கொண்ட ஆத்தியையே தாம் மாலையாகத் தரித்தவராதல் தெளியப்படும். இனிச் சேரர்க்குப் பனம்பூமாலை கூறப்படுதற்கும் வான்மீகத்தால் ஓர் பொருள்கொள்ளக் கிடக்கின்றது. கிழக்கு மேற்குத் திசைகளின் எல்லையாக, முத்தலையும் பத்துத்தலையுமுடைய பனைமரங்கள் ஆண்டுத்தேவர்களால் நாட்டப்பட்டுள்ளன என்று, கிஷ்கந்தாகாண்டத்தில் வானரர்களை நாடவிட்ட சருக்கங்களிற் கூறப்படுகின்றது. சேரர், மேற்றிசையரசராதலின், கீழமேலோடிய தேசமுழுமைக்குந் தாங்களே உரியவரென்பதைச் சூசிப்பதற்கு அத்திசைகளில் எல்லையாகவைத்த பனையைத் தங்கள் சின்னமாகக்கொண்டனர் எனல் தக்கதுபோலும்.

தமிழ்மக்கள் பூச்சூடுதல்:—தமிழரசர் போர்க்குச் செல்லும் போது அதற்கென்று ஒருவகைப் பூவும், தங்குலத்திற்கென்று ஓர் அடையாளப் பூவும்—ஆக இருவகைப்பூவுடையரென்பது பழைய தமிழ் நூல்களால் அறியப்படுகின்றது, அன்றியும் நிரைகவர்தல் நிரைமீட்சி முதலாக நிகழும் போர்த்தொழில்களில் ஒவ்வொன்றற்கு ஒரு பூச்சூடிச்செல்லுதலும் மரபாம். இப்பூப்பற்றியே வெட்சி, கரந்தை, உழிஞை, வஞ்சி என அப்போர்த்துறைகள் பெயர்பெறுதலுங் காண்க. இவ்வாறே, அகப்பொருட்டுறைகளாகிய புணர்தல், பிரிதல் முதலியவைகளும், குறிஞ்சி பாலை என அவ்வந் நிலத்துக்கேற்ற பூப்பெயரானே வழங்கப்படும். இவற்றால் தென்னாட்டார் பூவணிவதிற் கொண்டிருந்த பெருவிருப்பம் புலனாம். இவ்வழக்கத்தையே, வான்மீகிமுனிவர், அயோத்தியாகாண்டம், ௯௯-ம் சருக்கத்தில் பரதன் கூற்றில் வைத்து "நமது யுத்தவீரர்கள் மேகங்களைப் போன்ற கறுத்த கேடயங்களுடன், **தென்னாட்டாரைப்போலத் தலைக்கணியாகப் பூக்களைச் சூடுகின்றனர்.**" எனக் கூறுதல் கவனிக்கத்தக்கது. சேனைவீரர் பூச்சூடுதற்குத் தென்னாட்டுமக்கள் சூடுதலை உவமையாக்குதலால், அம்மக்களை வீரராகக்கொள்ளுதலே பொருத்தம். அன்றிப் பொதுவில் ஜனங்களெனினுமாம். இங்ஙனம் பூச்சூடுதல் தென்னாட்டார்க்கு மிகச்சிறந்த வழக்கமென்பதை வால்மீகியார் நன்கறிந்து கூறுதல் கண்டுகொள்க.

திருவெண்காடு:—வால்மீகியார் தென்னாட்டைப்பற்றிக் கூறிய செய்திகளில் மிகமுக்கியமானது இவ்விஷயம். ஸ்ரீராமபிரான் கணையால், கரன் பூமியில் மாண்டுவிழுந்ததைக் கூறும்போது,

> 𑌸 𑌪𑌪𑌾𑌤 𑌖𑌰𑍋 𑌭𑍂𑌮𑍌 𑌦𑌹𑍍𑌯𑌮𑌾𑌨𑌃 𑌶𑌰𑌾𑌗𑍍𑌨𑌿𑌨𑌾 ।
> 𑌰𑍁𑌦𑍍𑌰𑍇𑌣𑍇𑌵 𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌦𑌗𑍍𑌧𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑌾𑌰𑌣𑍍𑌯𑍇 𑌯𑌥𑌾𑌨𑍍𑌤𑌕𑌃 ॥

இதன்பொருள்:—சுவேதாரண்யத்தில் ருத்திரனால் தகிக்கப்பட்டு அந்தகன் மாய்ந்ததுபோல, கரன், இராமருடைய சராக்கினியால் தகிக்கப்பட்டுப் பூமியில் விழுந்தான் என்பது. வான்மீகத்துக்கு உரையிட்டவர்களில் தீர்த்தர், சுவேதாரண்யமென்பது காவேரி கடலுடன் கலக்குமிடத்து உள்ளதென்பர். அஃதாவது இப்போ

துள்ள திருவெண்காடென்னும் சிவஸ்தலமேயாம். காவேரிக்கரையி லுள்ள சுவேதாரண்யத்தில் அந்தகாசுரன் என்பவனைச் சிவபிரான் எரித்துக்கொன்றது புராணப்பிரசித்தி என்பர் திலகர். இப்பொரு ளில் அந்தகன் என்பதிலுள்ள தகரம் வடமொழியில் நான்காவதாம். அத்திலகரே அந்தகன் எனப் பாடங்கொண்டு, (இதனில், தகரம் முதலாவது) சுவேதாரணியத்தில், சிவபிரான் மார்க்கண்டேயரு யிர்காத்தற்பொருட்டு யமனைக்கொன்ற சரிதம் அத்தலமான்மியத் துள்ளதாகலால் வால்மீகி அதனைக்குறித்தாரென்றுங் கொண்டார். இச்சரித்திரம் திருவெண்காட்டுக்கடுத்த திருக்கடவூரில் நிகழ்ந்ததெ ன்பது பிரசித்தமாயினும், அவ்விருதலமும் சுவேதாரணியமென்ற பிரதேசத்தைச்சார்ந்து ஒரேசரித்திரத்துக்குரிமை பூண்டனவென்று கொள்ளுதல் இழுக்காது. திருக்கடவூர்போலவே, திருவெண்காட் டிலும் யமனையுதைத்தசரிதம் நிகழ்ந்ததென்பதற்கு, சம்பந்தமூர்த் திகள் தேவாரத்தில்,

“வேலைமலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடுநான் மறையவன்றன்
மேலடர்வெங் காலனுயிர் விண்டபினை நமன்றூத
ராலமிடற் றானடியா ரென்றடர வஞ்சுவரே.”

“கோள்வித் தனைய கூற்றந் தன்னைக் குறிப்பினுன்
மாள்வித் தவனை மகிழ்ந்தங் கேத்து மாணிக்கா
யாள்வித் தமர நுலக மளிப்பா னூர்போலும்
வேள்விப் புகையால் வான மிருள்கூர் வெண்காடே.”

என்ற பாசுரங்களில் அச்சரிதம் அத்தலத்துக்குரியதாகக் கூறப்படுத லே தக்கசான்றும். இவற்றால், வான்மீகியார் வாக்கால் தென்னாட் டுத் தலமான்மியங் கூறப்படுதல் காண்க.

இன்னும் முற்காலத்தில் தென்னாட்டிலிருந்த கொடியவர்களா கிய அரக்கர்செய்கைகளில், அவர்களிறந்தால் எரிக்கப்படாது புதைக் கப்படுதல் ஒன்று. விராதன் என்ற அரக்கன் சாகுந்தருணத்தில் இராம லக்ஷ்மணர்களை நோக்கி, “என்னைக்குழியில் அடக்கஞ்செய்து விட்டு க்ஷேமமாய்ப் போங்கள்; இறந்துவிட்ட அரக்கர்களை அடக் கஞ் செய்வதே பழமையான தர்மம்.” என்று கேட்டுக்கொண்ட

தாக ஆரணியகாண்டம் நாலாம் சருக்கத்திற்கூறப்பட்டுள்ளது. இது, பழந்தமிழர்கொண்ட முறையுமாம். இனி வாதாபி இல்வலன் கதையை இராமபிரான் தம்மிளவற்கு எடுத்துரைக்குமிடத்தே, இல்வலன் பிராமணவேடந்தரித்து, தம்மவர்க்குரியதல்லாத ஸம்ஸ்கிருதபாஷையைப் பேசிக்கொண்டுவந்ததாகக் கூறுவதால், அரக்கர்கட்கு வடமொழி அந்நியபாஷையாயிருந்ததென்பது தெரியவருகிறது. இவ்வாறே, வான்மீகத்தால் அறியப்படும் தமிழ்வழக்குகள் சில குறிக்கப்பட்டன. சமயம்வாய்த்துழி மற்றுமுள்ளனவற்றை விளக்குவேன்.

பத்திராசிரியர்.

---

உ

சிவமயம்.

# சானசுருதியரசன் கதை.

சாமவேதசம்பந்தமாய் விளங்குஞ் சாந்தோக்கியோபநிடதத்திலே நான்காம் பிரபாடகத்திலே முதலாங்கண்டத்திலும், இரண்டாங்கண்டத்திலும், சேதுபுராணத்திலே முத்தீர்த்தச் சருக்கத்திலும் வித்தாரம்பெற இந்தச் சானசுருதியரசன்கதை சொல்லப்பட்டிருக்கின்றது. இரண்டும் ஒன்றற்கொன்று சிறிதுவேறுபாடுளவாயினும் பொருண்முடிபில் வேறுபாடில்லை. இங்கே சாந்தோக்கியத்தை அநுசரித்து இடையிடை சேதுபுராணத்தையுந் தழுவிக்கூறுதும்.

முற்காலத்திலே பெருஞ்செல்வனும், பெருங்கொடையாளனுந், தருமகுணசீலனுமாய் அரசனொருவன் இருந்தான். அவன் தனது நாட்டிலுள்ள நகரிகளிலும், வீதிகளிலும், நாற்சந்திகளிலும், பெருவழிகளிலும், மற்றையிடங்களிலும் அன்னசாலைகள் தாபித்து, அங்கே போக்குவரவுசெய்யுஞ் சனங்களை மறித்து நிறுத்தி அவர்களுக்கெல்லாம் அன்போடும் அன்னங்கொடுத்துப் பெரும்புகழ்படைத்து விளங்கினான். அவன்பெயர் சானசுருதி என்பர். சானசுருதி என்

பதும் சனசுருதி என்பவன்மரபிற் பிறந்தவன் எனப்பொருள்படுந் தத்திதாந்தநாமம். புத்திரன் என்றும் அரசன்புதல்வன் என்றும், அதனாற் பவுத்திரன் என்னும் பெயரையும் அடைந்தான் என்றும் சேதுபுராணம் கூறும்.

## சேதுபுராணம்.

சானசுருதி யபிதானந் தாணிகிருபன் புத்திரன்சேய்
ஆனமுறையாற் பவுத்திரனென் றறையும்பெயரு மடைந்துள்ளான்
தீனர்விழைவு தீர்க்கையினாற் சிரத்தாதேய னெனப்பட்டான்
மேனிதழைப்ப வட்டுதவி வெகுபாக்கியனுந் தானானான்.

அபிதானம் - நாமம். சேய் - மகன். தீனர் - வறியவர். விழைவு-விருப்பம். சிரத்தாதேயன் - சிரத்தையில்நிலைப்பவன். சிரத்தை-தருமகாரியத்திலன்பு. அட்டுதவி- (உணவுகளைப்) பாகஞ்செய்துகொடுத்து. பாக்கியன்-பயனடைந்தோன்.

பருப்பின்பொருப்புநெய்ந்நதியும்பழத்தோடலம்பும்பாற்கடலும்
விருப்பினறியகறிவகையும்வேண்டும்பிறவுமுளவாக்கிக்
கருப்புக்குறையுமுயிர்வளர்க்குங்காதலனை போற்கரைந்தன்பால்
திருப்பிகிறுவிவருவார்க்குஞ்செல்வாரெவர்க்குஞ்சிறந்தளிப்பான்.

கரு - புக்கு - உறையும். அனை - அன்னை. கரைந்து-அழைத்து. திருப்பி - மறித்து.

இந்தச்சானசுருதியரசன் இங்ஙனப்பிரகாரம் அந்தானஞ்செய்து பெருங்கீர்த்திபெற்று விளங்கும் நாள்களிலே இவனை ஆட்கொள்ளுமாறு கருதிய முனிவருந்தேவரும் அன்னப்பறவைகளின் வடிவங்கொண்டார்கள். பின்னர் அந்த அன்னப்பறவைகள் இந்தச் சானசுருதியரசன் வசிக்கும் மேல்வீட்டுக்குமேலே பறந்துபோயின. போகும்போது முன்னர்ச்செல்லும் அன்னத்தைப் பின்னர்ச்செல்லும் அன்னமநோக்கிப் பலாக்க! இந்த மேல்வீட்டில் இருக்கும் சானசுருதியரசனை நீ துதியாமற் செல்வது நீதியன்று; இவனே தருமகுணசீலன். இவனுடைய காந்தி யாண்டும்பரந்து செறிந்திருக்கின்றது. துதியாதுபோகுங்கால், அது எங்கள் தோகைகளையெல்லாம் எரித்துவிடும் என்று சொல்லிற்று. பலாக்கன் என்பதற்கு உரைகாரர் கூறு

ம்பார்வையுடையவன் என்று பொருள்கூறுவர். பலாக்கன் என்பது சேதுபுராணத்திலும் வருகின்றது.

## சேதுபுராணம்.

நிற்றிநிற்றிநீபலாக்கநீடுசீர்மராளகா
வெற்றியோடுவிரசுசானசுருதியிந்தமேனிலத்
துற்றுளானிவ்வாறுதானுணர்ந்திலாய்கொலுள்ளமேற்
சற்றுமெண்ணிலாமலந்தர்தம்மினேகுகின்றியால்.

மராளகன் - இராசவன்னம். மேனிலம் - மேல்வீடு. அந்தர் - குருடர். முன்னர்ப்பலாக்கன் என்றதும் அரசனை நோக்காமை கருதிப்போலும். முன்னர்ச்செல்லும் அன்னப்பறவை இவ்வார்த்தைகளைக் கேட்டு அதனை நோக்கி நீ இந்த அரசனைவியந்துபேசுவது நீதிதானா? இந்தச்சானசுருதி யரசனோ சிறியன்! உண்மை தெளிகிலாதவன்! அறிவிலாத மருளன்! மூகன்! அவலன்! வஞ்சன் எனக்கு இவனை வியந்து கூறற்க. பண்டியிற்செல்லும் இரைக்குவமுனிவனையே பரக்கவியந்துரைக்குக. அம்முனிவன்போன்ற தருமகுணசீலனும் தத்துவஞானியும் இவ்வுலகில் வேறில்லை" என்று சொல்லிற்று.

## சேதுபுராணம்.

இறையினீடு மிவனிழைத்த தருமய்யாவு மீறுறும்
பிறையினோடு கட்டும்வேணி சாணிலன்பு பெற்றசீர்
மறையினேன் மனத்திலுண்மை ஞானமென்று மாய்வுறு
தறையநாடின் முனிரயுக்கு வன்றன்மேன்மை யறைதிநீ.

இவனிழைத்த தருமம் யாவும் என்றது சானசுருதியரசன் செய்த தருமங்களை. பிறையினோடு கட்டும் வேணி - சிவபிரான். மறையினேன் என்றது இரைக்குவமுனிவனை. நீ என்றது பின்னர்ச்செல்லும் அன்னத்தினை.

அந்த இரைக்குவ முனிவன் யாவன்? என்று பின்னர்ச்செல்லும் அன்னப்பறவை வினவிற்று. சூது விளையாட்டிலே பகடை என்னுந் தாயமடைந்தவனுக்குப் பின்னுள்ளதாயமெல்லாந் தானே வந்து சாருதல்போல உலகத்திலே சனங்கள் செய்யுந்தருமங்களின்

பலங்களெல்லாந் தானே வந்து தன்னையடையுந் தவவலியுடைய தத்துவஞானி எவனோ அவனே என்று முன்னர்ச்செல்லும் அன்னம் சொல்லிற்று.

இந்த அன்னங்கள் ஒன்றற்கொன்று தன்னைச்சுட்டிக் கூறிய சம்பாஷணையை மேல்வீட்டிலிருந்த சானசுருதி யரசனும் கேட்டுத் தன் செயல்களிலே வெறுப்புற்றுத் தன் குறைவையுஞ் சிந்தித்து இரைக்குவ முனிவனை எய்தி உய்திபெறவேண்டும் என்னும் இச்சையோடும் நித்திரைசெய்தான். பின்னர் வைகறையிலே நித்திரைவிட்டெழும்பும்பொருட்டு வைதாலிகர்கள் வந்து துயிலெடைநிலை பாடினார்கள். அரசன் அவர்களைநோக்கி இரைக்குவ முனிவன் என்று என்னை நீவிர் எண்ணியிருக்கின்றீர் போலும்! இம்மங்கல கவிகளுக்கு யான் தக்கவனல்லேன். இரைக்குவன் எனப்படும் முனிவரே இதற்குத் தக்கவர். அவர் பிரமஞானிகள் வசிக்கும் பெருங்காடு, நதிதீரம், மலைச்சாரல் முதலிய தனியிடங்களிலே வசிப்பார். அவரைப் போய்த் தேடிப்பார்த்துக் கண்டுகொண்டு இருக்குமிடத்தை எனக்கறிவிக்கக் கடவீர் என்றான். வைதாலிகர் - பலவித தாளங்களோடுந் துயிலெடை நிலைபாடுவார்.

### சேதுபுராணம்.

முடவனுன முனியையெய்தி முந்தைஞான மடையவே
கடவனென்று நெடியவேலை கையினீந்து வார்கள்போற்
படரிருட்க ழித்தெழுச்சி பாடுவார்கள் பாடல்கேட்
டுடல்வருந்தி னேரின்மெல்ல வுற்றெழுந்து பின்னரே.

முடவனுன முனியை என்றது இரைக்குவ முனிவனை. முந்தை ஞானம் - தத்துவஞானம். வேலை - கடல். எழுச்சிபாடுவார்கள் - வைதாலிகர்.

பின்னர் வைதாலிகர்கள் காடுகளிலும் மலைகளிலும் வேறுவேறிடங்களிலுந் தேடித்திரிந்து ஒருபடி இரைக்குவ முனிவனைக்கண்டுகொண்டு அவனிருக்கும் இடத்தை அரசனுக்குச் சொன்னார்கள். அரசனும் நன்றென்று மகிழ்ச்சியுற்று பசுக்கள் அறுநூறு, கண்டசரம் ஒன்று, வண்டி ஒன்று என்னும் இவைகளோடு தனது குமாரி

*

யையும் அழைத்துக்கொண்டு முனிவனிருக்கும்இடம்நோக்கிச் சென்ருன். சென்று முனிவனைக்கண்டு முனிசிரேஷ்டரே! இவைகளைப் பெற்றுக்கொண்டு பிரமஞானத்தை எனக்கருளல்வேண்டும் என்று பிரார்த்தித்தான். (சேதுபுராணம் சிறுமியைக் கொண்டுபோன செய்தியை விலக்கும்.)

இரைக்குவமுனிவன் "சேலுலாவு கடலுடுத்த செகதலப்பொருள்களாற், சாலுமோன முனிவர்சிந்தை தானிறைக்க லாகுமோ" என்றுசொல்லி அப்பொருள்களை வேண்டாமென்று முற்ற நீக்கிவிட்டுச் சானசுருதியரசனுக்குப் பிரமஞானத்தை உபதேசித்தான்.

தானதருமங்களை யடைதலினுந் தத்துவஞானத்தை யடைந்து கொள்ளுதல் விசிட்டம் என்பதும், தருமதாதாவினுந் தத்துவஞானி விசிட்டன் என்பதும் இதனுற்பெறப்படும்.

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

சுன்னுகம்.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# ஜப்பானில் பாய்பின்னுதற்றொழில்.

கைத்தொழில்வன்மையால் முன்னுக்குவந்த தேசம் ஜப்பான். ஐரோப்பாவிற்குப் பிரித்தானியா எப்படியோ, அப்படியே ஜப்பான் ஆசியாகண்டத்திற்கும். ஜப்பான்தேசத்துச் சிறுவர்கள் விளையாட்டாகச் செய்யும் நீர்ச்சக்கிரங்கள், பெரிய இயந்திரங்கள் ஓட்டச்சாதகமாயிருக்கின்றனவென்ருல், அத்தேசத்துக் கைத்தொழில்வன்மை பெரிதும் ஆச்சரியிக்கக்கூடியதாகுமன்றே? ஜப்பானியக்கொள்கைகள் பல அனுஷ்டிக்கப்பட்டால், நம்நாடு கைத்தொழில்களில் ஒருகால் மேம்படாதா? கைத்தொழிலபிவிருத்தி இந்தியாவில் உண்டாகவேண்டுமானல், சில விஷயங்களில் ஜப்பானின் மாதிரிகளைத் தள்ளாது கைக்கொள்ளல் வேண்டியதவசியமேயாம். ஜப்பானில் செய்

யப்படும் கைத்தொழில் வேலைகள் பலவற்றில் பாய்பின்னுந்தொழிலைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். இவ்வேலை ஒவ்வொரு ஜப்பானிய வீட்டிலும் புருஷ, பெண்டு, பிள்ளைகளும் ஓயாது தம் ஒழிவு நேரங்களிலும், பிரசமயங்களிலும் செய்யும் வேலையாய் இப்போதும் இருந்துவருகிறது. இவ்வேலையைப்பற்றி முதன்முதலில் அவ்விராஜாங்கத்தில் 1888-ஆம் வருஷத்திற்றான் கணக்கெடுக்கப்பட்டது. அப்போது இவ்வேலை அங்கு அவ்வளவு மும்முரத்திலிருந்ததில்லை. ஆனால் நாளாவர்த்தியில் அக்கைத்தொழில்வேலை நன்குவிருத்திக்கு வந்தது. பின்னர் இப்பாய்களும், இவற்றின் மகிமைகளும் வெளியாகி, வெளியில்நானுதேசங்களுக்கும், ஏற்றுமதிசெய்யப்படும்படியாயிற்று. 1907-ஆம்வருஷத்தில் ஜப்பானிலிருந்து வேற்று நாடுகளுக்கு 22,000 பவுனிலிருந்து, 584,000-பவுன் வரையிலும் விலைமதிப்பான கோரைப்பாய்கள் ஏற்றுமதியாயின வென்றால் இக்கைத்தொழில் விருத்தி அப்போது எவ்வளவு விருத்திமுகத்திலிருந்திருக்கிறதென்பது சொல்லாமலே அறியலாம். பிரிட்டிஷ் வியாபாரிகளே இவ்விதக்கைத்தொழிலபிவிருத்திக்கு முதலில் காரணபூதராயிருந்தார்களென்றாலும், மற்றைய ஐக்கிய மாகாணங்கள் (United states.) பலவும், இக்கோரைப்பாய்களுக்குக் கிராக்கியுண்டுபண்ணினதால், பின்னும் அப்பாய் வியாபாரம் பலத்தது. ஜப்பானில் ஜங்கஸ் கம்மூனிஸ் (Juncus and communis) என்னும் லத்தீன் (Latin) பெயர்கொண்ட கோரைப்புற்களினால், இப்பாய்கள் பின்னப்படுகின்றன. இக்கோரைப்புற்கள், ஜப்பானின் நெல்வயல்களின் ஓரங்களில் விசேஷமாய்ப் பயிராகின்றன. இக்கோரைப்புற்களை அவர்கள் தகுந்த எருப்போட்டுப் பராமரிக்கிறார்கள். இவைகளை வளர்ந்தபிறகு வெட்டி, வெயிலில் காயவைக்கிறார்கள். இவைகளின் நீளங்களையும், குட்டைத்தன்மையையும் அநுசரித்து, தரவாரியாய் எடுத்து அவசியமானால் சாயத்திலேயும், தோய்த்தெடுத்து, பந்தோபஸ்தானவிடங்களில் சேகரித்து வைக்கிறார்கள். இவைகளைத்தறிகளினுதவிகொண்டு பலவிதப்பாய்கள் அலங்காரமான மாதிரிகளாயும் பின்னப்படுகின்றன. கைத்தறி நெய்வதில் அதற்கு நீரோட்டச்சக்தியும் (Water power) உபயோகப்படுத்தப்படுகின்றது. ஜப்பானின் சிறிதுபாகங்களில் பாய்பின்னும் ஜனங்கள் சொந்தத்தறியையோ, இரவற்றறியையோ, உபயோ

கப்படுந்துவதுடன் கில்லாது, வர்த்தகசாலைகளிலும் புகுந்து, பாய் பின்னும் தொழிலைமேற்கொண்டு உஜ்ஜீவிக்கின்றனர். ஜப்பான்நாட்டு ஒவ்வொருவீட்டிலுமுள்ள ஸ்திரீ புருஷ சிசுக்கள்கூட இப்பாய் பின்னுந்தொழிலை இடைவிட்டு இடைவிட்டு, மாறிமாறிச் செய்வதாயிருக்கிறபடியால், பாய்பின்னும் வர்த்தகசாலைகளில், அவ்வளவு ஏராளமான வேலைநடப்பதில்லை. இப்படியாக வீட்டிலேயேபாய்பின்னுவதனால் அநுகூலங்களுமுள, பிரதிகூலங்களுமுள. வீட்டில்பாய் பின்னுந்தொழில் செய்தலினால், பாய்கள், அவ்வளவு ஒழுங்காயும், சரிசமானமாயுமில்லாமலிருப்பதுடன், பாய்க்கோரைகள் நேர்த்தியாகவுமிருப்பதில்லை. ஜப்பானியர், தாங்கள் பின்னும்பாய்களை, தங்களுக்கு வெளியிலிருந்து வாங்குபவரிடமிருந்து வந்திருக்கும் கிராக்கிகளுக்குத் (orders) தகுந்தவிதமாய்ப் பின்னுகிறார்கள். முந்தியவருஷங்களில் எவ்விதமான பாய்களுக்கு வெளிநாட்டிலிருந்து கிராக்கிகள் வந்துவிற்றனவோ, அம்மாதிரியான பாய்களையும், பின்னித்தயாராய், ஸ்டோரில் (Store) சேமித்துவைக்கிறார்கள். பருத்திகலந்தகோடுபோட்ட (Striped Matting made in cotton wraps) 40-கெஜம் கோரைப்பாயின் ஒரு சுருள் 6-ரூபாவரை விலைகுறைந்திருக்கிறது. இப்பாய்களுக்கு வெளிநாட்டிலிருந்து கிராக்கி ஜாஸ்திவருவதனால், விலைவிகிதங்களும், இப்போது சற்று உயர்ந்து நிதானமேயில்லாதிருக்கின்றது. கொஞ்சகாலமாக கோரைப்புல் அகப்படுவதும் சிறிது அருமையாயிருப்பதனால், பாய்பின்னும் இச்சனங்கள் கீழ்த்தரமாயுள்ள பாய்களை, மார்க்கட்டுகளில் விற்கப்பிரயத்தனப்பட்டதில் இப்பேர்ப்பட்ட பாய்க்கிராக்கியும் குறைந்துவிடப் பார்த்தமையால், ஜப்பான் கவர்ன்மெண்டார், உபயோகமற்றதான இவ்வித சரக்குகளை பெரும்பாலாய் வெளியேற்றி ஜப்பான் கைத்தொழிற்பெருமையைக் கெடுத்துவிடாமல் பார்த்துக்கொள்வதில் கவனம்வைக்க, அதற்கென்று ஒரு இனிஸ்பெக்டராபீசு 1905-ஆம் ஏற்படுத்தினார்கள். இவ்விதபரிசோதனை ஆபீசு ஏற்பட்டதுமுதல் இதுவரையில், அப்பாய்ச்சரக்கின்மாதிரியில் யாதொரு அதிகவித்தியாசம் இல்லையென்றுபொதுவாகச் சொல்லப்பட்டாலும், உயர்வுசரக்குகள் உற்பத்தியாகவும், தாழ்ந்த சரக்குகள் சோரபலிருக்கவும் ஏதுக்களிருக்கின்றனவெனவே சொல்லப்படுகிறது. கெட்டசரக்கு ஏற்றுமதிகள் முழுவதையுமே

இவ்வாபீசார் இந்நாட்டிலிருந்து நிறுத்தவல்லவரல்லராயினும், பாய்கள் முன்னைவிட நல்லதாய், ஏற்றுமதி செய்யவேண்டுமென்று, கண்டிக்க அதிகாரம் பெற்றுள்ளார்கள். ஆகவே, இம்மாதிரியான பரிசோதனை ஆபீசினால் பலன் உண்டென்றே நினைக்கவேண்டியதாயிருக்கிறது. இவ்விஷயத்தில், ஜப்பான், இந்தியாவுக்கு ஒரு நன்மதி புகட்டக்கூடியதாயிருக்கின்றது.

மேற்கூறிய மாதிரியான இனிஸ்பெக்ஷன் ஆபீசொன்று கோபி (Kobe) என்னும் பட்டணத்திலும் ஸ்தாபிக்கப்பட்டு, ஏற்றுமதியாகும் பாய்களனைத்தும் அவ்வாபீசில் பரிசோதிக்கப்பட்டுத்தான் வேற்றுநாட்டுக்குச் செல்கின்றன. இவ்வாபீசிலேயே, அப்பாய்கள் பின்னும் முறை, சாயம்போடுமுறை, பாய்பின்னச்சரக்குகள் தெரிந்தெடுக்குமுறை, ஓரம் பின்னும் முறை, நீளம் அகலம் கனம் இவைகளைப் பற்றிப் பரிசோதனைகள் செய்து, அத்தொழில் விருத்தியில் ஜப்பானியர்களை ஊக்கமுயர்த்தவும், ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இம்மாதிரியான பாய்பின்னுந்தொழில் நம்மிந்தியாவிலும், இல்லாது போகவில்லை. சென்னை இராஜதானியில் தென்னாற்காடு ஜில்லாவில் முக்கியமாய்ப் பறங்கிப்பேட்டை, கடலூர் முதலியவிடங்களிலும், தஞ்சையில் சீகாழி தாலூக்காவிலுள்ள கொள்ளிடக்கரைக்கிப்புறத்திலுள்ள ஆ(னை)ணிக்காரன் சத்திரம், நம் நாட்டில் துருக்கர் வாசஸ்தானமாகிய தைக்கால் முதலியவிடங்களிலும், மேலைக்கரையில் பாலக்காடு, கள்ளிக்கோட்டை, திருநெல்வேலிக்கடுத்த பத்தமடை போன்ற சில கிராமங்களிலும், இப் பாய்வேலை வெகுநேர்த்தியாகவும், விதம் விதமாகவும் பின்னப்பட்டுப் பாயொன்று ரூபா 50, 60, 100, 150 வரையில் விலையில் மதிப்புப் பெற்றிருக்கின்றன. இப்பாய்களில் பட்டுகள் சேர்த்து வெகு நேர்த்தியாய்ப்பின்னும் மாதிரிமிருதியும் சிலாகிக்கத்தகுந்தது. தினுசுக்குத்தகுந்தாற்போல விலைமதிப்பேறப்பெற்ற, ஒருமனிதன் படுக்கக்கூடிய அகலமும் நீளமுமுள்ள, ஒருபாயினை உள்ளங்கையில் சுருட்டிமடக்கி வைத்துக்கொள்ளும்படியான அந்தஸ்தில் செய்யப்படுவதென்றால், நம் நாட்டுக்கைத் தொழிலைப்பற்றிக் கேட்பானேன்! இவ்வருமையான பாய்களைத் தவிர்த்து கிராமங்கள்தோறுமுள்ள நிலங்களின் ஓரங்களில் யாதோ ரெருவுமின்றி தானாகவே, ஜலத்திலும் வளர்ந்து கிடக்கும் கோரைப்

புற்களைக்கொண்டு நம் நாட்டு ஸ்திரீ புருஷர்களும் நேர்த்தியான கோரைப்பாய்களைப் பின்னி வீட்டுபயோகத்திற்குப்பெரிதும் பயன் படுத்திக்கொள்ளுகிறார்கள். மோட்டா (rough) வாகப் பின்னும் இப்பாய்கள் நம் நாட்டில் மழைக்காலங்களில் ஏழைச்சனங்கள் குளிரின் தடுப்புக்காகக் கம்பளங்களாய் உபயோகிக்கிறார்கள். கிராமத்துப் பிராமணஸ்திரீகளாற் பெரிதும் இப்பாய்கள் பின்னப்பட்டு, ஆசாரமான பொருள்கள் உலர்த்தற்பொருட்டு உபயோகப்படுத்தப் படுவதுடன், மழைகாலத்தில் ஈரமான தரைகளில் பாய்கள் கெட்டுப் போகுமேயென்ற பயமில்லாமல் உபயோகப்படுத்தப்படுகிறது. இவ்வித முரட்டுப்பாய்கள் 7-அடி நீளமும் 4-அடி அகலமும்கொண்டது பாய் ஒன்று ஒரு ரூபா முதல் ஒன்றரை ரூபா வரையில் விலைக் ககப்படும். ஜப்பான் போன்ற கீழ்ப்பிரதேச நாடுகளிலொன்றாகிய நம் இந்தியாவிலும் அங்கு அகப்படும் மாதிரியான கோரைப்புற்கள் அகப்பட்டு, அவர்கள்போலவே, நம்வீட்டு ஸ்திரீகளும், செய்யுமியல் பினராயினும் காலதேச வர்த்தமானங்களை யனுசரித்து, இப்பேர்ப்பட்ட அருமையான கைத்தொழிலை நம் நாட்டில் ஆதரிப்பாரின்றி வீணாகவிடப்பட்டிருப்பது நம்மவர்களுக்குப் பெரிதும் கௌரவக் குறைச்சலேயாம். சிக்கனச்செலவும், கைத்தொழில் வேலையுமன்றோ, ஒருநாட்டைப் பெரிதும், முன்னுக்குக்கொண்டுவருவதாயிருப்பது என்பதற்கு நம்தேசம்போன்ற ஜப்பான் நாடே உதாரணமாய் எதிரில் நிற்பது தெரிந்தும், நம்மவர் சுகஜீவனஞ்செய்யு நெறியையறியாது, கைத்தொழில் வேலைகளென்றால்: ஏனோதானோவென் றிருப்பதும், நம் நாட்டுத்தலைவர்கள் இருந்தஇடந்தெரியாமல் மறைந்தேபோன கைத்தொழில்களைக் கிளப்ப பலத்த முயற்சிகள் செய்யாதிருப்பதும், நம்தேசம் முன்னுக்குவரும் வழியை நாடுவதன்று. கோரப்பாயைத்தவிர்த்து, மெத்தென்றிருக்கும்படியான நவநவமான தாழம்பாய்கள் நம்நாட்டுக்கடற்கரையோரங்களிலுள்ள துருக்கர்களாற் பின்னி விற்கப்படுகின்றன. இக்கைத்தொழிலாளிகள் தமக்கு வேண்டிய சிறு முதல்களில்லாமலும், இதனை ஆதரிப்பார் யாருமில்லாமலுமன்றோ திடீரென தாம் தம் ஜீவனோபாயத்திற் குற்றதாகிய அக்கைத்தொழிலைவிட்டு அடிமைத்தொழில் செய்ய நேரிடுகின்றது. நம் நாட்டு ஜனங்களுக்குச் சுகமாய்க்காலம் தள்ளக்கூடிய விதம் நேரிதாய ஒன்

று வேண்டுமானல், நம் தலைவர்கள் ஒன்றுசேர்ந்து, நசித்துப்போய்க் கொண்டிருக்கின்ற அதியற்புதமான கைத்தொழில் வேலைகளையும், இப்போது, இங்கும் அங்கும் பிரபலமாய் இல்லாமல், சோர்ந்தாற் போற் கிடக்கும் இப் பாய்முடைதல் வேலையையும் தக்கபடி சிரத்தை யெடுத்து முன்னுக்கு இலகுவாய்க்கொண்டுவந்து, நம் நாட்டு ஜனங்களை மோரீசு, சிங்கப்பூர் போய்க் கேவலமான அடிமை நிலையில் ஜீவிக்க வழிவிடாது; நம் நாட்டிலேயே கௌரவமாகத் தங்கள் கைத்தொழிலினலேயே அவர்கள் ஜீவிக்க உதவிசெய்யவேண்டும். ஜப்பான் மாதிரியைப்பின்பற்றி நம் நாட்டுச் சரக்குகள் வேற்றுநாடு போகும்போது பகட்டாயும், பிறரால் நன்கு மதிக்கும்படியான வேலைப்பாட்டுடனேயும் போகும்படியான சட்டதிட்டங்களைத் தங்களுக்குள்ளே செய்துகொண்டும், நம் கவரன்மென்டாரின் உதவிகொண்டும், நம் நாடு ஜப்பான் நாடுபோன்று விருத்தியடையும்படியாய்ப் பார்க்கவேண்டும். இப்படி நாம் கைகோத்து வேலைசெய்து கைத்தொழில்களை யபிவிருத்தி செய்தாலல்லது நமக்குச் சுகமாய்க் காலந்தள்ள நேரிய வழிகிடைக்காமல், என்றென்றைக்கும் இன்றிருந்த ஸ்திதியிலேயே இருக்கநேரிடும்.

வீ. சுப்பிரமணிய ஐயர்.

---

ஸ்ரீ:

# கதாசரித் சாகரம்.

ரு-வது சதுர்த்தாரிகாலம்பகம் க-வது தரங்கம்.

[ஸ்ரீமத்-வீராசாமி ஐயங்காரவர்கள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

---

அவர் சொல்லியதைக் கேட்ட பிராமணர்கள் ஒருவர்க்கொருவர் ஆராய்ந்து பார்க்குங்கால் தங்கள் தங்கள் குழந்தைகளனைவரும் உயிரோடிருப்பதைக்கண்டு பட்டணத்திலுள்ள மற்றனைவரையும் விசாரித்ததில் எல்லோரும் தங்கள் குழந்தைகளும் சௌக்கியத்துட னிருப்பதாகவே கூறினர். அதையறிந்த பிராமணர்கள்

ஓகோ! எல்லோர் குழந்தைகளு மூயிரோடிருக்கும்போது இவர் யாருடைய குழந்தைகளைப் பக்ஷித்தனர். மூடர்களான நாம் வீணய் இந்தச்சாதுப் பிராமணரைத் தூஷித்தோமே யென்று சொல்லும் பொழுதே அந்த ஹரஸ்வாமி யென்பவர் நாமிந்த அபவாதத்தினின்றும் நீங்கித் தூய்மை யடைந்தோம். இனி யிவ்வூரிலிருத்தல் தகாதென்று கருதி யந்நகரத்தினின்றும் வெளியேற எத்தனித்தனர். ஆனல் நல்ல மனத்தினையுடைய வொருவர் துர்ஜனர்களாலுண்டாக்கப்படும் தீமையினல் மனம் வேறுபட்டால் விவேகமற்றவத் தேசத்திலிருக்க எவ்வண்ணம் பற்றுதலுண்டாகும். பின்பவ்வூரிலுள்ள பிராமணர் வைசியர் முதலியோர்கள் சென்று ஹரஸ்வாமியினது கால்களில் வீழ்ந்து வணங்கி நீர் வேறிடம் செல்வது நியாயமன்றென்று மிகவும் பிரார்த்திக்க, அவர் அவ்விடத்தில் வசித்தனர். இவ்வாறு துர்ஜனர்கள் சாது ஜனங்களுடைய நல்லொழுக்கத்தைக் கண்டவுடன் ஒரு காரணமுமின்றித் துவேஷமுற்று வாயில் வந்தபடி பொய்யான தூஷணங்களை யவர்மேலேற்றி யுரைக்கின்றனர். இப்படி யிருக்க அத்துஷ்டர்கள் ஏதேனுங் குறை கூறுதற்குரிய சிறிதிடம் பெற்றல் எரிகின்ற தீயில் மிகுந்த நெய்யைப் பெய்ததாய் முடியும். ஆதலால், ஹே வத்சே! நீ யென்னை துன்புறச்செய்யாதிருக்கக் கருதுவாயாகில் ஒளிர்ந்தெழுகின்ற புதிதாகிய இந்த யௌவனதெசையில் துர்ஜனர்களெளிதிலபவாதஞ்சொல்லுதற்குரிய கன்னித் தன்மையோடு நீடித்துனதிஷ்டத்தின்படி யிருப்பது சரியன்று என்று அரசன் தன் புதல்வி கனகரேகையிடம் சொல்ல அவள் நிலைபெற்ற நிச்சயத்துடன் கூடியவளாய் மறுபடியு மரசனை நோக்கி ஹே பிதா, அந்தக் கனகபுரியை யெந்தப்பிராமணனல்லது க்ஷத்திரியன் பார்த்திருக்கின்றனே அவனை விரைவிலழைத்து வந்து அவனுக்கென்னை மணம் புரிந்து கொடும். யானிதைப் பற்றி முன்னரே சொல்லியிருக்கின்றேனே யென்றனள். அதனைக்கேட்ட அரசன் திடமான சித்தத்தையுடைய தன் புத்திரியை பூர்வ ஜன்ம ஞானமுடையவளென்றெண்ணி யிவளை மனதிற்கிசைந்த கணவனுடன் சேர்ப்பதற்கு வேறுபாய மொன்றுங்காண்கிலனய் அதுமுதலத்தேசத்தி லனுதினமும் புதிதாய் வருகின்றவர்களை விசாரிப்பதற்காக மறுபடியும் அவ்வரசனெப்பொழுதும் பறை யறையும்படி

யுத்திரவளித்தனன். அந்த வுத்தரவின்படி வேலைக்காரரும், பிராமண க்ஷத்திரிய ஜாதியர்களில் யாரேனு மொருவர் கனகபுரியென்னும் நகரத்தைப் பார்த்திருந்தாற் சொல்லவேண்டும். அவருக்கு மகாராஜா தன்னுடைய கன்னிகையைக்கொடுப்பதோடு யௌவராஜ்யத்தையுங் கொடுப்பதாய் உத்தரவு செய்திருக்கின்றாரென்றடிக்கடி சொல்லிக் கொண்டு எங்கும் பறை யறைந்தனர். அப்போது ஒருவராவது கனகபுரியைப் பார்த்திருக்கின்றவரகப்படவில்லை.

கதாசரித் சாகரத்தில் 5-வது சதுர்த்தாரிகாலம்பகத்தில்

க-வது தரங்கம் முற்றிற்று.

---

## 2-வது தரங்கம்.

இஃதிப்படியிருக்கக் காளைப்பருவத்தோடிருக்கின்ற சக்திதேவனென்றபிராமணன் தான் கருதிய ராஜகன்னிகையா லவமானமடைந்து மன வருத்தமுற்றவனாய் நாம் கனகபுரியைப் பார்த்ததாய்ப் பொய்மொழி கூறியதாலவமானத்தை யடைந்தோமேயன்றி ராஜகுமாரியை யடையவில்லை; அவளை யெப்படியாவதடையவேண்டும். ஆதலால், நமது பிராணன்போனாலும் சரி கனகபுரியைக் காணுமளவும் பூமி முழுவதும் சுற்றவேண்டும்; அதனைப்பார்த்து வந்திந்த ராஜகன்னிகையைக் கைக்கொள்ளாவிடில் நமது பிராணனிருந்தென்னபயனென்றாலோசித்து ப்ரதிக்ஞை செய்துகொண்டு அந்த வர்த்தமானபுரத்தினின்று மப்பார்ப்பான் தென்திசையைப்பற்றிப்ரயாணமாயினன். இவ்வண்ணம் முறையே அத்திசையை நோக்கிச் செல்கின்ற அவன் தனதாசையைப்போலவே யெளிதிலடைய முடியாததும்நெடியதுமாயிருக்கின்ற விந்தியமகாரண்யத்தில்ப்ரவேசித்தனன். அப்போது அவ்வனமானது காற்றினாலசைகின்ற மரங்களின் மெல்லிய தளிர்களால் சூரியகிரணங்களால் தாபமுற்றிருக்கின்ற தன்னை வீசுகின்றதுபோலக்காணப்பட்டது. (அன்றியும்) மிகுந்த திருடர்களாலுண்டாகுமவமதிப்பின் துக்கத்தைச் சகியாது, கொடிய சிங்கம் முதலியவற்றால் கொல்லப்படும் மிருகங்களின் பேரொலிகளால் எப்போதுமலறிக்கொண்டிருப்பது போலவும், ஒருபுறத்தில் பெரிதாகிய

*

பாலை நிலத்தினின்றும் தன்படியே வெளியேறிவருகின்ற அத்யுக்கிரமான கிரணங்களால் ஆதவனுடைய கொடிய கிரணங்களையும் வெல்லக் கருதுகின்றது போலவுமிருந்தது. ஜல சம்பந்தம் சற்றுமில்லாமையாலெளிதில் விபத்தை விளைக்கின்றதும் ஓயாமல் கடந்து சென்றாலும் தூரமாகவிருக்கின்ற இடத்தினையுடையதுமான அந்தமகாரண்யத்தில் அவன் பலநாட்களில் நெடுந்தூரமான வழியைக் கடந்து போய் ஏகாந்தமான வோர்புறத்தில் குளிர்ந்து தெளிந்த ஜலத்தினையுடைய மிகப்பெரியதோர் தடாகத்தினைக் கண்ணுற்றனன். அது வெண்டாமரை மலராகிய குடையுடனும் ப்ரகாசிக்கின்றஹம்சங்களாகிய சாமரங்களுடனுங்கூடி யுலகிலுள்ள தடாகங்களனைத்திற்கும் மேலாயரசாட்சிபுரிவது போலிருந்தது. அதில் அவன் சந்தோஷத்துடன் ஸ்நானம்முதலியவற்றைமுடித்துக்கொண்டுவெளியேறிவருங்கால் அத்தடாகத்தின் வடபக்கத்தில் மிகுந்த கனிகள்நிரம்பி அழகிய விருக்ஷங்களுடன் கூடியதோராச்ரமத்தைக்கண்டுசெல்லும் ஆங்கோரரசமரத்தின்கீழ் அனேகதாபசர்கள் புடைசூழ விருத்தராய் வீற்றிருக்கும்சூர்யதபசென்ற பெயருள்ளவொரு முனிவரைப்பார்த்தனன். அவர் தன்வயதின் வருஷங்களாகிய நூற்றாண்டுகளை யெண்ணிக்கணக்கிட்டுமுடிந்திருக்கின்ற முடிச்சுகள் போன்றதும் முதுமையால் வெளுத்திருக்கின்ற காது நுனியிற்றொங்குகின்றதுமான ஜபமாலையுடன் பிரகாசித்தனர். அப்பார்ப்பானம்முனிவரை நமஸ்கரித்த வண்ணமே யவரிடஞ்சென்றான். அவரும் அதிதிகட்குச்செய்யுமுபசாரத்தைச் செய்தவனை மகிழ்வித்துக் கனி முதலியவற்றால் பசி தீரவுண்பித்து அருமையோடு குழந்தாய்! நீயெங்கிருந்து வருகின்றாய் எவ்விடத்திற்குப் போகின்றாய் சொல்லென்று கேட்டனர். அதற்கவன் ஐச்வரியம் முதலிய அறகுணங்களும் நிறைந்த ஐயனே? யான் வர்த்தமானபுரத்தினின்றும் வருகின்றேன். கனகபுரியென்னும் நகரத்தைப்பார்த்து வரவேண்டுமென்ற ப்ரதிஞ்ஞையோடு வெளியேறினேன். அந்நகர மெவ்விடத்திலிருக்கின்றதோ யறிகின்றிலேன். ஸ்வாமீ! தாங்களறிந்திருப்பீர்களாயின் எனக்கதனைச்சொல்ல வேண்டுமென்றம்முனிவரிடத்திலந்த சக்திதேவனென்பவன் வணக்கத்துடன் தெரிவித்தனன்.

(தொடரும்.)

சிவமயம்.

# ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது பாடிய வரலாறு.

(முற்றேடர்ச்சி.)

---

பின், புலவர் தம்மைக் கொல்லவந்த பழிகாரரை நோக்கி, ஓ செங்குந்தத் தலைவர்காள்! அடியேன் புகல்வதைப் பொறுமையோடுங் கேண்மின்கள். பெரும்புலவர்களாயுள்ளோர் தேவர்களையும் அரசர்களையும், தமக்காதரவாயுள்ள பிரபுக்களையும், அபிமானத்தாலேனும், பொருள்வேட்கையாலேனும், தனியே புராணங்களேயாக, பிரபந்தங்களேயாக, அவர்களது சரித முன்னிலையில் வர்ணித்துப் பாடுதல் மரபு. ஓர் குலத்தினை அக்குலத்தினர் வேண்டுகோளாலேனும், தன்னிச்சையாலேனும் வறிதே வருணித்தல் யாது பயன்?

"வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
யளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லை களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்." (நாலடியார்)

என்னு மான்றோர் வாக்கியம் நீங்களறிந்துள்ளதே. ஆதலால் நான் நமது குலத்தை வருணிக்கமாட்டேன். தம்மைத் தாமே பாடிக்கொண்டார்களென்னும் அபவாதத்தையும் நமது குலத்திற்குத் தரமாட்டேன். "வேளாளர் ஏர்பூட்டாவிட்டால் வேதியராதியர் வேரற்றுப்போவாரென்றும்," "வன்னியர் சிலையேந்தாவிட்டால் வையகமுற்றும் வரம்பற்றுச் சிதையு" மென்றுங் கற்பனைசெய்து பாடுவது எனது வழக்கமன்று. உள்ளதையே கூறி யாவரையும் உறுதிகொளச் செய்வேன். தங்குலத்தி லபிமானமும், பிறகுலத்தில் வைடம்மியமும் வகிப்பவன் யானன்று. எனதியல் பிவ்வண்ணமாயினும், உலைவாயை மூடலாம் ஊர்வாயை மூடுதலரிது. மேலும், சோழராஜாக்களாற் கிடைத்துள்ள செல்வம் எண்ணிலவாதலின், எனக்குப் பொருளாசையுமில்லை யென்பதை இவ்வுலகே உணர்த்தும். ஒவ்வோர் சமயத்தரும், தத்தஞ்சமயத்தையே மேலெனக் கூறி வாதித்

தல் போல, ஒவ்வொரு சாதியாருந் தத்தஞ் சாதியையே மேலாகக் கூறி வாதிடுதல் வழக்கு. அவ்வழக்கு முடிவி லிழுக்காமென்றதற்குச் சான்று. அவ்வக்குலத்தினரது தொழில் விகற்பமேயாம். இத்தகைய சமயத்தையுஞ் சாதியையும்பற்றி, ஓர் பிரபந்தங் கூறுமிடத்து, அப்பிரபந்தத்தால், யாதேனுமோர் அற்புதம் விளையின் அதுவே, யிவற்றை யெல்லாவற்றினு மேலெனக் கொள்ளுதல் சாமியமாகு மன்றோ? அடியேன் நவவீரர் பரம்பரையாகிய செங்குந்தர் மரபிற்றோன்றியுள்ளேனாயினும், என் வாக்கில் சத்தியலட்சுமியும், சாரதாதேவியும், சாஸ்வதமாகக் குடிகொண்டிருப்பது மெய்யேயாகில். அவர்கட்கு சகஸ்ரநாமார்ச்சனையின் பொருட்டு நங்குலத் தலைப்பிள்ளைகள் ஆயிரத்தெண்மர் சிரங்களைப் பரிசாகத் தருவிரேல், நமதாயுதமாகிய ஈட்டியைச் சுட்டி ஈட்டியெழுபது எனவோர் பிரபந்தம பாடிமுடித்து இவ்வுலகினரை வியக்கச்செய்கிறேன் என்றனர்.

இவ்வாறு கூத்தர் தலைப்பிள்ளைகளின் தலைப்பரிசு வேண்டியதைச் செவியுற்ற செங்குந்தர்கள், வியப்புந் திகைப்புங்கொண்டு ஒன்றுந் தோன்றாது வாளாநிற்க, புலவர் தமது மரபிற்றோன்றிய முன்னோருடைய வீரசூரச் செயல்கள் பலவற்றை நன்கெடுத்து விளக்கி, அவர்களை ஒருமுகமாக இணங்கும்படி பிரசங்கித்தனர். அஃதுணர்ந்த * கைக்கோளர்கள் அதிக உற்சாகங் கொண்டவர்களாகி யாவரும் ஒருமனதாகச் சம்மதித்து அவ்வாறேயாகுக வென்றுகூறிக் கூத்தரால் ஓர் நன்னாளைக் குறித்துக்கொண்டு விடைபெற்றுச் சென்றனரென்ப.

பின்பு, கூத்தர் தமதருமை நண்பரான சோமனிடம் கடிதில் விடைபெற்று உறையூரடைந்து, இராசராச சோழனைக்கண்டு புவனையில், ஆவூர்ச் செங்குந்தர்கட்கும் தமக்கும் நடந்த சம்பாஷணைகளையும், தமக்காகச் சோமன் காட்டிய நன்றியின் விசேடத்தையும், இனித்தாம் நடத்தப்புகுங்காரியத்தையும், அது நடைபெறுங்காலத்

* கைக்கோளரென்பது ஒழுக்கத்தின் கொள்கையோர் என்ப. கைக்கொள்வரென்னுந் தொழிற்பெயரின் தனிவினையாகிய கொள்ளென்னும் பகுதி கோளென நீண்டு பலர்பால் அர் விகுதிபுணர்ந்து கோளர் என்றாயிற்று. (இலக்கணக்கொத்து. வினையியல். உ-வது சூத்திரம்.)

தையும் விளம்பினர். அதுகேட்ட வேந்தன் வியந்த சிந்தையனாய்க் கவிப்பெருமானின் புலமையாற்றலுக்குப் பெரிதுங் களித்து அத் தெய்வீகம் நிகழும் சுபதினத்தை எதிர்பார்த்திருந்தனனுக.

கூத்தர்பால் விடைபெற்றுச் சென்ற செங்குந்தர்கள் இனி ஆக வேண்டியிருக்கும் பெருவிஷயத்திற்காக ஓர் சபைகூட்டி, அதிற் பிரபந்தம் பாடும்பொருட்டு உத்தேசித்துள்ள காரியாதிகட்குச் செய்ய வேண்டுவன இஃதென்று ஓர் தீர்மானஞ்செய்து அதனை ஓர் திருமுகமாக்கித் தங்களை யொத்த நாட்டினர் பலர்க்கும் விடுத்தனர்.

திருமுகம் பெற்ற நாட்டாருள் * ஒருநாட்டாரொழிய ஏனையரெல்லாம் திருமுகத்திற் குறித்தபடி மிக உற்சாகத்துடன் தலைப்பிள்ளைகள் ஆயிரத்தெண்மர் சிரங்களைக் கண்டித்து, அவைகளை வண்டிகளிலுய்த்து உறையூரிலுள்ள சோழனது அரண்மனைக்கண்கொண்டு வந்து கூத்தருக்கு அறிவித்தனர்.

அஃதுணர்ந்த கூத்தர் செங்குந்தவீரர்களின் தீரம் பெரியசெய்கைக்கும், வாய்மையாகிய மேம்பாட்டிற்குப் பெரிதும் வியந்து, அவர்கள் கொணர்ந்துள்ள சிரங்களைச் சோழ வேந்தனது, சபாமண்டப வாயிலில் சிங்காதனம்போல் அடுக்கி இரத்தப்பாவாடைவிரித்து அலங்கரித்து வைமின்கள், அவ்விடத்து யாம் வருவோம் என்று கூறினர். அவ்வாறே யவர்கள் அரசனது சபாமண்டப வாயிலை யடைந்து அங்குள்ளோர் யாரும் பயந்து நடுங்கிப் பிரமித்து வியக்கும்படியாக ஆயிரத்தெண்மர்களது சிரங்களை வரிசைப்படச்சிங்காதனம் போலடுக்கிக் கூத்தர் வரவுக்கெதிர் பார்த்திருந்தன ரென்ப.

இவை, ஈட்டியெழுபதென்னும் நூலில்,

"வரச்சிங் காதன வளவர் தம்பிரான்
றரச்சிங் காதனந் தன்னி லேறியே
துரைச்சிங் காதனந் தொழுங் கவிக்கிடுஞ்
சிரச்சிங் காதனச் சீர்செங் குந்தமே."

---

* இந்நாட்டினர் தலைகொடுத்தற் கஞ்சினராதலால் நாளதுகாறும் "தலைகொடா மரபிலர்" எனவழங்கிநின்று, மற்றைய நாட்டினரோடு மணவினையாதிகளிற் சம்பந்தங்களைப் பெருது திருமலைநாயக்கன் பட்டினத்திற் கருகே தங்குலவொழுக்கங்களிற் குன்றாது தனியே யிருப்பவரென்றறிக.

"வேட்டுமொ ணூடரி தாய வேணியர்
சூட்டுதோன் வாரிசத் துணைக ளேத்தியே
யாட்டுக சென்னியை யலர்த்தி யேயெனக்
காட்டுதெற் கேயரி கவின்கைக் குந்தமே."

"வட்டமா ரவையுழை வந்த மேலவ
ரிட்டபா வாடை கண்டிசை பெருதுமண்
முட்டவந் துயிர்பெறீஇ மொய்த்து ளேமெனக்
கட்டுள குந்தர்சீர் கழறி யேத்தினர்."

எனவரும் செய்யுட்களால் செங்குந்தர்கள் கூத்தர் பாடலுக்குத் தலையரிந்து ஆசனமிட்டு இரத்தப்பாவாடை விரித்தமை யுணரப் படும்.

இராசராசச் சோழன் தமது சம்ஸ்தான வித்துவானாகிய ஒட்டக்கூத்தரால், நடைபெறவிருக்கும் தெய்வீகங்களைக் காணவேண்டி மந்திரி, பிரதானியர் பந்துவர்க்கத்தினர், வித்வஜனர், கடைகாப்பாளர், கருமாதிகாரர் ஆதிய தமக்குரிய அங்கங்களோடும், மற்றும் அங்குவந்து குழுமிய நகரமாக்களுடனேயும், சபாமண்டபத்தை யடைந்து அவரவர்க்குரிய இருக்கைகளிலிருந்தனர்.

அது சமயம் கூத்தர், தமது நித்யகர்மானுஷ்டானங்களை விதிப்படி முடித்துக்கொண்டு, உபாசனாமூர்த்தியைப் பூசித்து அப்பூஜா கோலத்துடன் தமக்குரிய பல விருதுவரிசைகளோடு மங்கலவாத்திய முழங்கச் சபாமண்டபத்திற் கெழுந்தருளி அங்கு தமக்கமைத்துள்ள சிரச் சிங்காதனத்தின்மீதிவர்ந்து பதுமாசனமிட்டு வீற்றிருந்து, இனிக் கூறப்புகும் நூலிடையூறின்றி இனிது நிறைவேறுமாறு இருகரங்களையுந் தமது சிரத்தின்மீது கூப்பிக் கலைமகளாரைத் துதித்து, வணங்கி முதலில் விநாயகர் காப்பும், பாயிரமுங்கூறிப் பின்,

"பூதலம் வாழ்க குந்தர் பொலிவுடன் விளங்க நான்கு
வேதமெந் நாளு மோங்க வேதியர் பசுக்கள் பல்க
மாதவர் வளவன் செங்கோல் வளமைகுன் ருது நிற்க
வேதமே யறையும் பொன்னி யுறந்தையுஞ் சிறக்க மாதோ." (க)

எனத்தொடங்கி,

"செந்தமிழ்க் காகப் போந்து சிவந்தபா வாடை யாக
நந்தமக் கிடுங்கா லெந்த நகாமு முளம் வியந்த
வந்தாத் தமரர் வாழ்த்தி யணிமலர் மாரி பெய்தா
ரிந்தச்செங் குந்தர் பெற்ற விசையெவர் பெற்று ரம்மா" (எ0)

எனவரும் எழுபது பாக்களால் தமது குந்தக்குலத்தைப் புகழ்ந்து "ஈட்டியெழுபது" என்னும் நூலியற்றித் தாமிருந்த சிரச்சிங்காதனத் தினின்றும் இழிந்தன ரென்ப. இதுவே,

"பூவார் புவனையிற் சோமன் றரும்பழி போன பின்பு
நாவாணர் போற்றிய நாடகங் கேட்ப நலமுடனே
யாவாணர் செங்குந்த ராயிரத் தெண்டலை கொய்திரத்தப்
பாவாடை யிட்ட துலகமெல்லாம் புகழ் பாலித்ததே."
(பாயிரம்)

எனவரும் ஈட்டியெழுபதாற் குறித்ததாகும். இச்செய்தி நிகழ்ந்தது, குமாரகுலோத்துங்கன் மகன் இராசராசன் காலத்தி லென்பதை,

"முத்தமி ழிராசரா சேந்த்ரன் முன்னமே
சுத்தவீ ரத்திறந் துலங்கு தற்கொரு
பொய்த்தலை கொடுத்தலிற் புகழ்பெ றுதென
மெய்த்தலை கொடுத்தன வீரக் குந்தமே." (சு0)

எனவருமாற்று னுணர்க. இவனது அரசாட்சிக்காலம் கி. பி. 1162 முதல், 1200 மேற் சிலவாண்டுகள் வரையும் எனவறிக.

இவ்வீட்டியெழுபதென்னும் பிரபந்தத்தைக் கல்வித்திறமுடைய சோழனும் மகிழ்ந்து கேட்டனனென்பதை.

"கோட்கவி கொண்டு மாக்கள் கொடுந்தமிழ்க் கூற நீத்து
தாட்கவிப் புதியவாட்டந் தலைக்கடை துரந்து சாட
வாட்கவிக் கொண்ட மன்னன் வளவனு மகிழ நாமே
நாட்கவி பாடு நாட்போ லிருப்பது பெரிய நாடே. (உ)

எனவருதலா னுணரப்படும்.

இப்பிரபந்தம் உறையூரின்கண்ணே பாடப்பட்டதென்பது, இந்நூல் முதற்செய்யுளாகிய "பூதலம் வாழ்க" எனவரும் செய்யுட்

டொடக்கத்தே, "வேதமே யுறையும் பொன்னி யுறந்தையுஞ் சிறக்க மாதோ" எனவரும் சுற்றடியானுணரப்படும்.

பாண்டிய பல்லவ சக்கரவர்த்திகள் தங்கள் நெடிய ஆட்சிக்கு முக்கிய இராஜதானியாக மதுரையையும், காஞ்சியையும் வகுத்துக் கொண்டதுபோல், சோழசக்கரவர்த்திகள் தங்கள் ஆளுகைக்கு உறையூர், தஞ்சை முதலான நகரங்களை இராஜதானியாகக் கொண்டாரென அறிதல் வேண்டும். இவ்வுறையூரை டாலமி 'சொர்னகாஸ் இராஜாங்கப்பட்டணமான ஓர் தௌரா' என்கிறார். உறந்தை என்பதும் இதுவே. இந்நகரம் காவிரியாற்றின் தென்கரையிலுள்ளது. இக்காலத்திலும் உறையூரென்ற நாமத்தையே வகித்து திரிச்சிராப்பள்ளிக்குப் பக்கத்தே உள்ளது. சுமார் 1300 வருஷங்களுக்கு முந்திய அக்காலத்தில் இப்பட்டணம் ஓர் கோட்டையாலும், அதன் வெளியே ஓர் அகழியாலும், அதன் புறம்பே ஓர்காவன் மரக்காவாலும் சுற்றப்பட்டிருந்தது. சிலப்பதிகாரத்தில் நாடுகாண் காதையில்,

"உறையூர் நொச்சி யொருபுடை யொதுங்கி"

என்று கூறப்பட்டிருக்கிறது. மேலும், இந்நகரத்திற்குக் கோழியூர் என்று பெயராம். "முற்காலத்து ஓர் கோழி யானையைப் போர் தொலைத்தலான் அந்நிலத்திற் செய்த நகர்க்குக் கோழியூர் என்பது பெயராயிற்று" என்று அடியார்க்குநல்லார் சொல்லியிருக்கிறார். சிலப்பதிகாரத்தில் மேற்படி காதையில்,

"முறஞ்செவி வாரண முன்சம முருக்கிய
புறஞ்சிறை வாரணம் புக்கனர்"

என்றுள்ளது. இங்ஙனஞ் சீரும் சிறப்பும் பெற்றிலங்கிய இந்நகரில் இத்தகைய தெய்வீகங்கள் விளங்கிப் புகழ்தற்குரிய சிறந்த நிலைக்களமாக விருந்ததென்றால் அளவிடற் பாலதோ?

பின், கவிச்சக்கரவர்த்தியாகிய கூத்தர், மீண்டும் அச்சிரச் சிங்காதனத்தைப் பார்த்து சரஸ்வதி தேவியினுடைய திருவுருவை மனதிற் றியானித்து,

"கலைவாணி நீயுலகி லிருப்பதுவுங் கல்வியுணர் கவிவல் லோரை
நிலையாகப் புரப்பதுவு மவர்நாவில் வாழ்வதுவு நிசமே யன்றே
சிலைவாண னுவிருந்தா யிரம்புயங்கள் துணிந்துமுயர் சீவ னுற்றான்
தலையாவி கொடுத்திடுஞ்செங் குந்தருயிர் பெற்றிடநீ தயைசெய் வாயே."

என்னும் பாடலைப்பாடிப் பிரார்த்திக்க, முன்னம் அவ்வுடம்பைவிட்டு அனுப்பப்பட்ட தலைகள் சென்றுமீண்டும் அவ்வுடம்போடுசேர்ந்து ஒன்றியிட மாண்டபிள்ளைகள் மீண்டுஎழுந்தனர். இவ்விபவத்தை அரசனுதிய அவையினர்யாருங் கண்டுவியந்து இது கவிச்சக்கரவர்த்திவல்லபந்தானோ? செங்குந்தவீரர்களின் மாறுபடாத வீரந்தானோ? கலைமகளாரின் சிறந்த திருவருளேயோ? எத்தகையர்க்குமற்புதத்தை விளக்குமித்தினக்காட்சி புதுமைபுதுமை எனக் கொண்டாடினர்.

இவ்வாறு துணியப்பட்டதலைகளையும், உடல்களையும் ஒட்டப் பண்ணிய காரணத்தால் அதுமுதல் இவர்க்கு "ஒட்டக்கூத்தர்" என்று பெயராயிற்றெனவறிக. (ஒட்டன் ஒட்டுதற்றொழிலையுடையவன்; ஒட்டனுகிய கூத்தனென்க.)

இத்தகைய ஒப்புயர்வற்ற சிறப்புத்தமக்கும், தமது சாதிக்கும், அக்கைக்கோளர்களால் உண்டானமையை,

"நிலைதந்தார் புவியினுக்கும் யாவருக்கு * மானமதை நிலைக்கத்தந்தார்
கலைதந்தார் வணிகருக்குச் சீவனஞ்செய்திட வென்றே கையிற்றந்தார்
விலைதந்தார் தமிழினுக்குச் செங்குந்த ரென்கவிக்கு விலையாகத்தான்
தலைதந்தாரெனக் கொட்டக்கூத்தனெனும் பெயரினையுந் தாந்தந்தாரே"

என்று இவர்தாமே புகழ்ந்து கூறியுள்ளார். இவ்வரலாற்றில் செங்குந்தர்கள், தமிழின் மாட்டுவைத்திருந்த பேரபிமானமும், இணையற்ற சூரத்தன்மையும், மனத்துணிவும், ஆத்மத்தியாகமும், விளங்குவதோடு, ஒட்டக்கூத்தருடைய தெய்வப்புலமையும், உண்மைநிலையும், உறுதிப்பாடும், அவரிடமிருந்த சரஸ்வதிகடாக்ஷமும், மற்றும் அவரது உத்தமகுணவிசேடங்களும் நன்கு விளங்கும்.

இப்புலவர் பெருமான் இயற்றிய பிரசித்தமான நூல்கள்:—உத்

* 'அபிமானம் நிலைக்கத்தந்தார்' எனவும் பாடம்.

*

தாராமாயணம், ஈட்டியெழுபது, வீரபத்திரப்பரணி எனவழங்கும் தக்ஷயாகப்பரணி, அண்டத்துப்பரணி, அரும்பகைத்தொள்ளாயிரம், நாலாயிரக்கோவை, குமாரகுலோத்துங்கசோழன்கோவை, மூவருலா, மற்றுமாம்.

கூத்தர், கோவை, உலா, அந்தாதிபாடுவதில் ஒப்புயர்வில்லாமல் மிகச்சிறந்தவராவர். இதனை,

"வெண்பாவிற் புகழேந்திபரணிக்கோர்சயங்கொண்டான் விருத்தமென்னும்
ஒண்பாவி லுயர்கம்பன் கோவையுலா வந்தாதிக் கொட்டக்கூத்தர்
கண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள் வசைபாடக் காளமேகம்
பண்பாகப் பகர்சந்தம் படிக்காச லாதொருவர் பகரொணாதே"

எனப்பிற்காலத்தார் பாடிவைத்துள்ளதானறிக.

இவ்வளவே ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது பாடிய வரலாறாகும். இப்பெரியாரது காலம் இற்றைக்கு (1020) ஆயிரத்திருபது வருஷங்களுக்கு முந்தியதாமெனக் கொள்க. இக்காரணத்தால் ஒட்டக்கூத்தர் ஈட்டியெழுபது பாடிய காலமும் இதுவேயாம். விநோத "ரஸமஞ்சரி" மெட்ரிகுலேஷன் (டெக்ஸ்ட்டின்) தமிழ் நோட்சு முதலியவற்றிலும், ஈட்டியெழுபது பாடிய வரலாறுகள் முன்னுக்குப்பின் முரணாகவும், கற்பனை முதலிய கட்டுரைகளாலும்; செறிவுற்று, அதன் உண்மை நிலைகண்டறிந்து மகிழ்தற்கேதுவின்றி மலினமடைந்து நிற்கின்றதை, "தமிழ்நாவலர் சரிதை, விக்கிரமசோழனுலா, அரும்பகைத் தொள்ளாயிரம், தமிழ்ச்செய்யுட் சிந்தாமணி" ஆதிய நூல்களின் ஆதரவுகளை மேற்கொண்டு, முற்கூறிய மாறுபாடாதிய குற்றங்களை முற்றும் நீக்கி, அவற்றின் உண்மைச் சரிதம் இதுவாகுமெனத்தெள்ளியநடையில் இங்கு நன்குவிளக்க முயன்றதாமென்க.

இதனைச்சீரிய செங்குந்தசிகாமணிகள் அன்புடனேற்று மகிழ்ந்தின்புறுவாராக. சுபம்!

ஒட்டக்கூத்தர் திருவடிவாழ்க.

ஈட்டியெழுபது பாடிய வரலாறு முற்றிற்று.

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோவை.

# இந்தியா இறைமாட்சி.

இவ்வியாசத்தின்கண்ணே இவ்விந்தியாதேசத்தின் மாட்சியும், அரசர்கண்மாட்சியுங் கூறப்படுதலான், இது இந்தியா இறைமாட்சி என்னும் பெயர்த்தாயிற்று. அல்லதூஉம் மாட்சிமைதங்கிய நம் இந்தியா சக்கரவர்த்தியவர்களின் மாட்சியைக் கூறப்பெறுதலானே இப்பெயர்த்தாயிற்றெனினும் ஏற்புடைத்தென்க.

இந்தியா என்பது இப்பரதகண்டத்தின் ஒரு பெரும்பாகமாம். பல நகரங்களையுடைத்தாகிப் பரந்து செழித்த ஒரு பாகத்தையே தேசம் எனக்கூறுப. தேசம் நாடு என்பன ஒருபொருட்சொற்கள். முதற்கண் பொதுவகையானே நாட்டினிலக்கணங்களைக் கூறுதும்.

நாடு என்பது:—குன்றாதவிளையுளும் அறவோரும் கேடில்லாச் செல்வரும் உடைமையும், அளவிறந்த பொருளுண்மையாற் பிரதேயத்தாரானும் விரும்பப்படுதலும், வேற்றுத்தேயமன்பதைகளும் ஆன்மேதிமுதலியவும் தமதேயத்தே பகைவந்து நலிவுறுத்தற்கஞ்சியாதல், அரசன் கொடுங்கோற்கஞ்சுற்றுதல் வறுமையான் மெலிவுற்றுதல் தன்பாற் போந்திறை கொண்டக்காலை அவ்வத்தேயத்துத் தொல்வாழ்வினும் நல்வாழ்வுபெற்றினிதிருப்பக்கோடலும், அரசர்க்கிறுக்கும் இறைப்பொருளைத் தண்டத்தலைவர்கொள்ளப்போதருமுன்னரே கொண்டுசென்று கொடுத்தலும், மிக்கபசியுந் தொக்கபிணியும் புறப்பகையும் உட்பகையும் * எட்டுவகையிடரும் சேராமையும் மண்மீதூற்றுநீரும் கொண்மூவூற்றுநீரும் வான்வறந்துழியும் வளங்தருமலையும், அதன்கட்போதரும் யாறும் அழியாதநகரிகளும் ஆகிய உறுப்புக்களையுடைமையும் புண்ணிய பாவநன்மைதீமைகளை விதித்தன செய்துவிலக்கியனதவிர்ந்து விளங்கும் மன்பதைப்பெருக்கமுடைமையும் இன்னும் இத்தகைய பலவும் ஒருதேயத்திற்குச்சிறந்த இலக்கணங்களென ஆன்றோர் கூறுப. மழை பனி வெயில் காற்று

---

* எட்டுவகையிடராவன—"விட்டில் கிளி நாய்வாய் வேற்றரசு தன்னரசு-நட்டம் பெரும் பெயல்காற்றெட்டு." என்பது புறப்பொருள் வெண்பாமாலையுரை.

முதலியவற்றாலிடுக்கட்பாடுறாது எல்லா விளைபொருள்கட்கும் ஏற்ற பெற்றித்தாகித் தன்கண்வாழ்வார் தமக்குவேண்டும் பொருள்களையாண்டுப்பெறுவாமெனத் தேடிவருந்தாவண்ணம் பல்வகைப்பொருள்களும் மல்கப்பெற்றதே நாடென்பது. இன்னதொருபொருளையெவ்வுழிக்கொள்வாமென உசாவி அரிதின் முயன்று பிறநாட்டகத்துக் கொண்டுவப்ப அப்பொருளைத்தான் நல்கலாற்றாதநாடு நாடன்றாம்.

"நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு."

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு."

எனத் தேவர்பணித்தமை காண்க.

2. நமதுதேசம்:–நாட்டினிலக்கணங்களாக மேற்கூறிய அனைத்தானும் பொலிவுபெற்று விளங்குவது நம் இந்தியாதேசமேயாம். இமயமலையையொத்த மலையும், கங்கைநதியையொத்தயாறும், எல்லாப் பொருள்களும் விளைகின்ற குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் என்ற நானிலவளாகமும், தத்துவசாத்திரவுணர்ச்சியும் மற்றும்பற்பல நலங்களும் நம்நாட்டுக்குவாய்த்தவாறு வேறெந்நாட்டுக்கும் வாய்க்கவில்லை யென்பது யாவரும் ஒப்பத்தக்கதொன்றேயாம்.

3. அரசர்மாட்டுக்குடிகளன்பு:— "ஆங்கமைவெய்தியக்கண்ணும் பயமின்றே, வேந்தமைவில்லாதநாடு." எனத்தேவர் கூறியாங்கு ஒரு தேயமானது எல்லா நலத்தானும் சிறப்புற்றிருப்பினும் அரசனோடு ஒற்றுமையுடையதாய் அரசன்பாட்டுக்குடிகளன்பும் குடிகண்மாட்டு அரசனருளும் பொருந்தப்பெறாக்கால் முற்கூறிய நலங்களால் யாதோர் பயனுமின்றி, மதியிலாவானமும் மக்களில்லாமனையும் கண்ணிலா முகமும் பதியிலா மாதும், பொருளிலார் இளமையும் போலவறிதாமன்றோ? நம் தேசத்தார் அரசர்பக்கத்து எவ்வகையானஅன்பு செலுத்திவந்தனர்? என்பதை ஆராய்வாம். இவ்விந்தியாதேசமானது கடவுளிடத்தே நிறைந்த அன்புசெலுத்திவருங் கோட்பாடு கொண்டுள்ளது. தன் அன்பைச்செலுத்தத்தக்க தானம் கடவுளே யென்னும் முழுநோக்குடையது. ஆகவே இந்தியர்களின் அன்பிற்

குன்றவிடம் கடவுளேயாம். இத்தகைய கடவுளாகவே அரசரைப் பாவித்துள்ளது தேசமானல் இத்தேசத்தாருக்கு அரசர்பக்கலு ளதாய அன்பை வரம்பிட்டுக்கூறல் முடியுமாறன்றே. இந்தியர்க ளின் ராஜபக்திப்பெருவெள்ளத்தைக் கண்டுவியந்தன்றோ பொய்யா மொழி முதலிய விதிநூல்களினும், மற்றும்பல பெருநூல்களினும் அரசனைத் தெய்வமென்றே கூறக்காண்கின்றோம்.

"முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப்படும்." (திருக்குறள்.)

............அனைவோர்க்குந்தெய்வம்.

இலைமுகப்பைம்பூணிறை. (நீதிநெறிவிளக்கம்)

இன்னும் எத்தனை மேற்கோள்வேண்டுமேனுங் காட்டலாம். "திருவுடைமன்னரைக்காணிற் றிருமாலைக்கண்டேனே யென்னும்." (திருவாய்மொழி.)

என்று பெரியாரும் பணித்தனர்.

"இளையரினமுறையரென்றிகழார்நின்ற
ஒளியோடொழுகப்படும்."

என்னும் திருக்குறளுரையில் "ஒளி—உறங்காநிற்கவும் தாம் உலகங் காக்கின்ற அவர் கடவுட்டன்மை. அதனோடுபொருந்த ஒழுகலா வது அவர்கடவுளரும் தாம் மக்களுமாயொழுகுதல்" என்று ஆசிரி யர் பரிமேலழகரும் அரசரைக் கடவுளாகக்கொள்ளுமாற்றை நன்கு விளக்குவாராயினர். இக்கருத்துப்பற்றியே,

"உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமால்."

என்றார் திருத்தக்கதேவரும். கடவு ளில்லையெனக் கூறும் நாத்திக ரும் சிலருண்மையால் அரசரைக்கடவுளராகக் கருதுவதானே குடிக ளெல்லாரும் அவர்பால் அன்புடையரா யொழுகினரென்பது யாங் ஙனம் பெறுதும்? என்னின் நன்று கடாயினய்; புண்ணிய பாவ நன்மை தீமையுணர்வுடைமை நாட்டினிலக்கணமாக மேலே கூறின மையால் அது கடாவன்றுதலறிக. அல்லதூஉம் இத்தகைய போலிக்

கடாக்கட்கும் இடந்தராவண்ணம் மற்றோருதாரணமுகத்தானும் குடிகளன்புடைமையை முதியோர் விளக்கியிருத்தல் காட்டுதும்.

ஆத்திகர் நாத்திகர் ஆண் பெண் முதலிய எத்திறத்தாரும் தத்தம் உயிர்மீது அன்பு பூண்டொழுகுதல் கண்கூடாம். ஆதலின் தம் "மன்பதைகட்கு மன்னவனே உயிர்" என்று கூறியிருக்கின்றனர். பல்வகைப்பொருள்கள் உற்றார், பெற்றார் மனைவிமக்கள் உடம்புமுதலிய யாவற்றினும் மேம்பட உயிரைமதித்து அன்புசெலுத்துவதும், ஏனையவற்றையெல்லாம் துறந்தாகுதல் உயிரைக்காக்கமுற்படுந்தன்மையும் எவ்வெவர் மாட்டும் அனுபவத்தாலறிந்துள்ளாமன்றே. அரசனுக்கோரிடுக்கணுற்றுழித் தமக்குரிய பிறவெல்லாவற்றையும் நீத்தாதல் அவனைக்காக்க முற்படுங்குடிகளது பேரன்பை விளக்குதற்கன்றே அரசனையுயிராகவும் குடிகளையுடம்பாகவும் முதியோர் கூறிவைத்தனரென்க. இதனை,

"நெல்லுமுயிரன்றே நீருமுயிரன்றே
மன்னனுயிர்த்தே மலர்தலையுலகம்."

என்னும்புறப்பாட்டானும் "மலர்தலையுலகிற்குயிரெனச்சிறந்த அரசனதியல்பு" என்னும் ஆசிரியர் பரிமேலழகர் மொழியானும் நன்கு தெளிக.

4. அரசர்பாற்பழகுமுறை:—அரசர்பாற்பழகுங்காலும், சேவகஞ்செய்யுங்காலும், அவரிளையரென்றாதல், எளியரென்றாதல், இனமுறையரென்றாதல், நம்மை நன்குமதித்துள்ளாரென்றாதல் வரம்பின்றி நெருங்கி மனம்போனவாறெல்லாம் பேசலாகாதென்றும்; எக்காலத்து என்சொல்லுவரோ யாதுசெய்வரோ என்ற அச்சத்துடனே அவரைச்சார்ந்தொழுக வேண்டுமென்றும், அவ்வாறொழுகாக்கால் பல்வகைப்பட்ட இடுக்கண்களும் முடிவில் உயிர்க்கிறுதியும் வருதல் கூடுமென்றும் மேலையோர் வலியுறுத்துரைத்திருக்கின்றனர்.

"இளையரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும்.
கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர்" (திருக்குறள்.)

"அரசு நெருப்பு மலையுறை பாம்பும்
முழையுறை சீயமு மென்றிவை நான்கும்
இளைய வெளிய பயின்றனவென் றுள்ளி
இகழி னிழுக்கந் தரும்." (ஆசாரக்கோவை.)

"இகழினிகழ்ந்தாங் கிறைமக னென்று
புகழினு மொக்கப் புகழ்க—இகன்மன்னன்
சீர்வழிப்பட்டதே மன்பதை." நீதிநெறிவிளக்கம்.)

"முன்னவனருளைப்பெற்றுமும்மையுந்துறந்தோரேனும்
மன்னவன்சொன்னவாறேசொல்வதுவழக்காறு." (திருவிளையாடற்புராணம்)

இவற்றால் அரசரிடம் பழகுங்கால் எத்துணைக்கருத்துடன் குறிப்பறிந்தொழுகவேண்டுமென்பது பெறப்படுவதாம்.

5. அரசனைப்பகைத்தலடாதென்றல்:— எக்காரணத்தானுவது அரசனைப்பகைத்தவர் அவனாட்டுறினும் பிறநாட்டுப்புகினும் உய்தி கூடார். பெருமை அறிவு முயற்சி என்னும் மூவகை ஆற்றலும் நிரம்பப்பெற்றவேந்தர்க்கு ஊறுசெய்யக் கருதுவது யமனைக்கையாலழைத்துத்தம் உயிரைக்கொடுத்தலை யொப்பதன்றிப் பிறிதில்லை. ஆதலின் அரசன் கருத்துக்கிசையுமாறே நடத்தல்வேண்டுமென்றிப் பகைத்தால் உயிர்க்கிறுதிவரையுள்ள கேடனைத்து மெய்துமென அச்சுறுத்திக்கூறி முறைப்படுத்தியது நம் இந்துதேசவேதமன்றோ?

"யாண்டுச்சென்றியாண்டுமுளராகார்வெந்துப்பின்
வேந்துசெறப்பட்டவர்.

கூற்றத்தைக்கையால்விளித்தற்றாலாற்றுவார்க்
காற்றாதா ரின்னா செயல்." (திருக்குறள்.)

"......மன்னர் புதல்வரைக் கண்டாலன்ன அச்சமுங்கொண்டு"

(திருவிளையாடற்புராணம்).

மேற்கூறிய விடயங்களான் நம் இந்தியா தேசவாசிகளான குடிகள் தம் வேந்தரிடத்து வைத்துள்ள பெருமதிப்பும் பேரன்பும் அச்சமும் ஆகிய உயர்குணங்கள் இத்துணைச் சிறந்தனவாயிருந்தன வென்று நன்குதேறலாமன்றோ? இவ்வகையாக ராஜபக்தியிற் சிற

ந்து "மன்னவனெப்படி மன்னுயி ரப்படி" என்ற பழமொழியுடைய தாய் வாழ்ந்த நம் தேசமானது, தற்போது சிலகாலமாக ராஜ விசுவாசமற்றதென்று மாத்திரமேயல்லாமல், ராஜத்துவேஷமுடையதென்றுங் கூறலாம்படியிருக்கின்றது. இந்தநிலை மாறி முன்னிலும் ராஜபக்தி அதிகமாகக்கொண்டவர்கள் இந்தியர்கள் என்றுகூறத்தக்க காலம்வந்தாலன்றி நாம் முன்னுக்குவர முடியாது. இது சாமான்ய வசனமன்று. மநுஸ்மிருதி எ-வது அத்தியாயம் கஉ-வது சுலோகத்தில், "அவ்வரசனோடு எவன் புத்தியில்லாமையால் துவேஷித்துக்கொள்கிறானோ அவன் தானாகவே அழிந்துபோகிறான். அரசனும் அவன் அழிவைக்குறித்து, ஆலோசிக்கிறான். எனவும், கங-வது சுலோகத்தில். "ஆதலால் அவ்வரசன் எதைஅநுஷ்டிக்கும்படியாயும், எதை நீக்கும்படியாயும் ஏற்பாடு செய்கிறானோ அதை ஒருவரும் தடுக்கக்கூடாது" எனவும், அ-வது சுலோகத்தில் "அவ்வரசன் சிறுவனாகவிருந்தபோதிலும் அவனை மனிதனென்று அவமானம் செய்யக்கூடாது. ஏனெனின் மேலான தேவர்களின் கூட்டமே அந்த அரசனுருவமாக இருக்கிறதல்லவா" எனவும் கூறப்பட்டிருத்தல் பிரத்தியட்சமன்றோ? இவற்றைக் கவனித்தால் நாம் ஒவ்வொருவரும் அரசர் கட்டளை யெதுவானாலும் அதைச்செய்யுங் கடமையுடையவர்களென்று விளங்கவில்லையா? இவ்வாறான நீதிநூல்களையெல்லாம் சிறிதும் சிந்தியாது விடுவது முறையன்றென்பது மட்டுமா! அவற்றை யெழுதிவைத்த நம் முன்னோரையும் அவமதித்ததாகுமல்லவா? தற்போது நமது காருண்ய கவரன்மெண்டார் நம்மீது வைத்த பேருளால் நமக்குச் சில சுதந்தரங்களைக் கொடுத்திருக்கின்றனர். அவற்றையீந்தமைக்கு நன்றிபாராட்டாது அதிகவுரிமைகளைப் பெறவும், அரசரைப்போலாகவும், கருதுவதான பேராசைகொண்டு அவசர புத்தியால் சிலர் புரியும் முறையற்ற ராஜத்துவேஷ காரியங்களால் இத்தேசமுழுதுமே ராஜத்துவேஷமுடையதென்ற பேர்பெற நேரிடுகின்றதே. ஆனதால் பிரஜைகளாகிய நாம் அரசன் சட்டளைக் கடங்கி நடப்பதுடன் அக்கட்டளையை மீறுபவர்களை நம் விரோதிகளாகவே பாவித்து ராஜநிந்தனை புரிவார்க்குச்சிறிதும் இடந்தாராமலும் அவர்கள்பேச்சுக்குச் செவிசாயாமலும் புறக்கணித்து ஒதுக்கவேண்டும். இவ்வாறொழுகுதலே நமது நிகழ்கால எதிர்கால க்ஷேம

த்துக்கு ஏற்றபெற்றியாவதுடன் புகழ் புண்ணியங்கட்கும் பொரு ந்துவதாகும். இந்தியர்கள் எக்காலத்தும் இவ்வுண்மைகளை மறக்க லாகாது.

பிரஜைகளின் ராஜபக்தி முறைவகைகளை யிதுகாறும் எடுத் துக் கூறினம். இனி, அரசரிலக்கணங்களையும் நமது பண்டையரசர் களின் தன்மைகளையும், தற்காலம் இராஜாங்கத்தால் நாமடைந் துள்ள நலங்களையும் மற்றும் பொதுவகைகளையும், விதிநூல் முகத் தானும் பூர்வசரித்திரங்களானும், தற்கால அனுபவ வகையானும் இனிதெடுத்து விளக்குவாம்.

6. **அரசரிலக்கணம்:—** அமைச்சு நாடு அரண் பொருள் படை நட்பு என்னும் ஆறங்கங்களை யுடைமையும், அஞ்சாமை யறிவூக்கம் தூங்காமை கல்வி இவைகளைக் கோடலும், ஓதல் வேட்டல் ஈதலெ ன்னும் பொதுத் தொழிலினும், படைக்கலம்பயிறல் பல்லுயிரோம் பல் பகைத்திறந் தெறுதல் என்னும் சிறப்புத் தொழிலினும் வழு வாது நிற்றலும், பகைவரையழித்தல், திறைகோடல், தன்னுடுதலை யளித்தல் முதலியவற்றால் மண் பொன் நெல் முதலிய பொருள்வரு வாயைப் பெருக்கித் தொகுத்தலும், பகைவர் கள்வர் சுற்றத்தார் வினை செய்வாராதியரால் கவரவிடாது காத்தலும், கடவுளர் அற வோர் வறியரென்றிவர்க்கு அறப்பொருட்டாகவும் கரி பரி படை நாடு அரண் முதலியவற்றிற்குப் பொருட்பொருட்டாகவும், மண்ட பம் வாவி செய்குன்று இளமரக்கா என்றிவற்றிற்கு இன்பப்பொருட் டாகவும், முகமலர்ந் தினியகூறி அப்பொருளைக் கொடுத்தலும், காட் சிக்கெளியனாதலும், கடுஞ்சொற்கூறாமையும், இடித்துரை பொறுத் தலும், கல்வியறிவாற் பெரியாரைத் துணைக்கோடலும், இறைமாட்சி சிற்றினஞ்சேராதலும், உறவினர், பகைவர், நொதுமலர் என்றியார் மாட்டும் ஒரு படித்தாய் நிற்கும் செங்கோலுடைமையும், இன்னோ ன்ன பிறவும் அரசரதிலக்கணங்களாக ஆன்றோர் கூறுப.

அரசாட்சியென்னும் யந்திரவுருவத்துக்கு மந்திரிகளே கண்க ளாகவும், குடிகளே கால்களாகவும், நட்பாளரே வலிய புயங்களாக வும், ஒற்றுவரே செவிகளாகவும், விதிநூல்களே உணர்ச்சியாகவும், தூதுவரே வாயாகவும் கூறப்பட்டுள்ளனவென்பதை,

*

"மந்திரக் கிழவர் கண்ணு மக்கடன் ருள்களாகச்
சுந்தர வயிரத் திண்டோள் தோழராச் செவிகளொற்ரு
அந்தர வுணர்வுநூலா அரசெனு முருவுகொண்ட
எந்திர மிதற்கு வாயாத் தூதுவ ரியற்றப்பட்டார்"

என்னும் சூளாமணிச்செய்யுள் விளக்குவதாம். இவ்வாருகியவுருவகத்துள்ளே யடங்கிய பொருட்சிறப்பு மிகவியக்கற்பாலதாம்.

"கற்றமாந்தரைக்கண்ணெனக்கோடலும்"

என்ற திருத்தக்கதேவர் மொழிப்படி கல்வியறிவிற்சிறந்த மந்திரிகளே அரசனுக்குக் கண்ணென்ருர். கண்ணனது எல்லாப்பொருளையும் உள்ளவாறுகாணும் இயல்பிற்ருதல்போல் அரசன் மந்திரிகள் சொல்வழிநின்றே எல்லாவிஷயங்களையும் உள்ளவாறறிந்து கோடலைக் குறிப்பித்தவாறுமாம். எல்லாவுறுப்புக்களையும் தாங்கி நிற்பவை தாள்களேயாதலின் குடிகள் தத்தம் தொழில்வலத்தாற் பொருளீட்டித் தென்புலத்தாராதிய அனைவரையுங் காத்தற் குரியராதலின் அன்னவரையே கால்களாகக் கூறினர். அரசர் ஒற்றராலறிந்தவழியும் உண்மையை நேரேகாணவேண்டி ஒதுக்கிடத்தேவேற்ருருக்கொண்டு தம் தோள்களே தமக்குத்துணையாகத் தமித்துத் தங்கியுணரும் பெற்றிநோக்கித் தோள்களையே துணைவராகக் கூறினர் என்ப.

"ஒற்றிற் றெரியா சிறைப்புறத் தோர்துமெனப்
பொற்றேடுணை யாத்தெரிதந்துங் குற்றம்
அறிவறி தென்றஞ்சுவதே செங்கோன்மை"

என்னும் நீதிநெறிவிளக்கமும் இக்கருத்துப்பற்றியதேயாம். அரசர் தமது கண்கள் செல்லாத பரப்பில் நிகழ்வன வெல்லாவற்றையும் ஆண்டாண்டுச்சென்று கண்டுவந்து கூறுபவரே ஒற்றராவர். அரசர்கேள்வியானே அவற்றை நேரிற்கண்டாங்கு அறிதல்வேண்டுமாதலின் ஒற்றரையே செவிகளாகப் புகன்றனர். "அரசர்க்குச் செவிகண்" என்ற உலகவழக்குமொழியும், "கண்ணிற்சொலிச்செவியினோக்குமிறைமாட்சி" என்னும் நீதிநெறிவிளக்கத் திருவாக்கும் இவண் கவனித்தற்பாலவாம்.

மநு முதலிய விதிநூல்கள் கூறுமாறே அரசர் எல்லாவற்றையும் முடிவுசெய்ய வேண்டுமாதலின் அந்நூல்களையே விதி வகுக்கும் உணர்வாகக் கூறினர். "ஒற்று முறைசான்ற நூலு மிவையிரண்டும், தெற்றென்க மன்னவன் கண்" என்ற செந்நாப்போதார் திருவாக்கும் காணலாம். அன்றியும்,

"மண்ணியல் வளாகங் காக்குமன்னவர் வணக்கலாகாப்
புண்ணிய நீரரேனும் புலவராற் புகலப்பட்ட
நுண்ணிய நூலினன்றி நுழைபொருளுணர்தல் தேற்றார்
எண்ணிய துணிந்து செய்யுஞ் சூழ்ச்சியுமில்லையன்றே"

என்னும் சூளாமணிச்செய்யுளும் இக்கருத்தையே வலியுறுத்துவதாமென்க. சந்திவிக்கிரகங்கட்கு வேற்று வேந்தரிடைச்சென்று தான் வகுத்துக் கூறுவாருங் கூறியது கூறுவாருமாகித் தூதரை வாயாக மொழிந்தது. மிகப்பொருத்த முடையதாமென்க. இத்தூதுவர் கூற்றெல்லாம் அரசன்கூற்றாகவே வேற்று வேந்தரும் பிறரும் கோடல் கூடுமாதலின் இவ்வாறு சொல்லினர். இவ்வாறே அரசர் தன்மை பலவுள. அவையிற்றை முற்றவுணர்த்தலியலாமையின், அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டும் சுருக்கி வகுத்துக்கூறி மேற்சொல்வாம்.

7. அரசர் தர்மம்:— அரசராவார் தம்மாலும், தமது பரிசனங்களாலும், பகைவர்களாலும், கள்வராலும், விலங்கினங்களாலும், குடிகட்கு அச்சமுறாவாறு புரத்தல் முதலியன அரசர் தருமங்களாம். குடிகள் வறுமையாற்றளர்வுற்றபோதுங் கருணையின்றி இறைப்பொருளை நெருக்கி வாங்குவித்தல் முதலிடன அரசரால்வரும் அச்சமாம். தண்டத் தலைவராதியர் பரிதானங்கோடலாதிய பரிசனத்தால்வரும் அச்சமாம். தமதாக ஒருவர் கொண்டுள்ள பொருளைப் பிறர் கவர்தல் சூறையாடுதலாதிய கள்வரால்வரும் அச்சமாம். பைங்கூழையழித்தல் பசுக்களைக் கோறலாதிய விலங்கினங்களான்வரும் அச்சமாம். இவ்வைவகைப் பயமுந்நீர்த்தல் அரசர்கடமையாமென்பதை,

"மாநிலங்கா வலனவான் மன்னுயிர்காக் குங்காலை
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தாற் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனோ"

(பெரியபுராணம்)

"பரிசனம் பகைவர்கள்வர் படர்தரு முயிர்கடாமென்
றுரை செயைந் திடத்தினனு முலகிடை யிடையூறெய்தா
வரிசையிற் காத்து நீதிவழுக்கினூர்தம்மை மொத்திக்
கரிசறப் பொருளுங் கோடல் காவலர் தருமமென்றான்"

(விநாயகபுராணம்)

என வருபவற்றால் நன்கு தெளியலாம.

(இன்னும் வரும்.)

எம். கே. எம். அப்துல்காதிறு ராவுத்தர்,

---

௨

# நல்லொழுக்கம்.

## ஆறும் அதிகாரம்

[ஸ்ரீமத்-இலக்குமணப்போற்றிகள் மொழிபெயர்த்தது.]

(முற்றொடர்ச்சி.)

அவர் விடுதலைபெற்றுத்தன் கல்வித்தேர்ச்சியின் ஸ்தானத்தைத் திரும்ப அடைந்தபொழுது அவர் நெடுநாட்சிறையிலிருந்ததைப் பற்றிய சமாசாரத்தை எதிர்பார்த்துக்கொண்டு அவருடைய பிரதம பிரசங்கத்தினுக்குப் பெரிய கூட்டமானது கூடிற்று. ஆனல் டி. லீயன் (De-Leen) என்பவர் குற்றஞ்சாட்டினவர்மீது தோஷங்கூறு தவண்ணம் மிகவும் புத்தியும் சாந்தமுமுள்ளவராயிருந்தனர். "ஹெரி-டைஸ்-பேமஸ் (Heri-dice Bames) என்னும் வழக்கமான வாய்பாட்டால் ஐந்துவருஷங்களுக்குமுன்னர்த் துக்ககரமாய்த் தடுக்கப்பட்டிருந்த பிரசங்கத்தைத் திரும்பத்தொடங்குதலை மாத்திரம் செய்து தன் உபந்நியாசவிஷயத்தினுள் நேரே பிரவேசிப்பாராயினர்.

ஆனற் கோபக்குறிப்பைக் காட்டுவது நியாயமட்டுமல்ல, அவசியமுமெனும்படியான சமயமும் சந்தர்ப்பமும் இருக்கின்றன. பொ

ய்மை, தன்னயம்பாராட்டல், இரக்கமின்மையாகியவற்றைக்காணின்
கோபிக்கக்கூடாதவர்களாயிருக்கிறோம். தான்வெளியிடக் கடமை
யில்லாத சங்கதிகளினுங்கூட உண்மையான உணர்ச்சியுள்ளமனிதனு
க்கு எவ்விதமான அற்பத்தனம் அல்லது இழிவைக்கண்டமாத்திர
மே எரிச்சலுண்டாவது இயற்கை. "நிந்தையான கோபம்பற்றிச்
சலனப்படாத மனிதர்களுடன் எனக்குக்காரியமின்று" என்று பெர்த்
தஸ் (Perthes) என்பவர் சொன்னார். உலகத்திற்கெட்டவர்களை
விட நல்லவர்கள் மிகுந்திருக்கின்றனர். கெட்டவர்கள் தாங்கள்
அதிக தைரியமுள்ளவர்களாயிருப்பதினாலே மாத்திரம் வெற்றிபெறு
கின்றனர். தீர்மானபுத்தியுடன் தன்வல்லமையைச் செலுத்துகிற
மனிதனிடத்திற் பிரியப்படாமலிருக்கக்கூடவில்லை. அவன் அவ்வித
மாய்ச் செலுத்துகிற காரணத்திற்காகவே, வேறொன்றினுக்குமல்ல,
நாம் அவனுடைய பக்ஷத்தை ஆதரித்தல். அநேகமுறை நான்பேசிய
தற்காகப் பச்சாத்தாபப்பட்டிருக்கின்றேன். ஆனாற் பெரும்பாலும்
மௌனமாயிருந்ததற்காகவும் துக்கப்பட்டிருக்கிறேன்."

நியாயமானதை விரும்புகிறவன் அநீதி அல்லது அநீதியான
செய்கையைக் கண்டு கவனியாதிருத்தல் கூடாது. அவனுக்குச் சிர
த்தை இருந்தாற்றான் பூரண இருதயத்துடன் சிரத்தையாகவே பேசு
வான். ஓர் கௌரவமான ஸ்திரீ யெழுதியது வருமாறு:—

"ஓர் மேன்மையான சித்தமானது அயோக்கியதையை நிந்திக்
கக் கற்பிக்கின்றது. விலக்கப்பட்ட லாபங்களை எதிர்பார்த்தலையும்,
பொய்புகறலையும், தீயவைசெய்தலையும், மனசிற் பிறர்கெடுதலைத்
தங்கவைத்தலையும், சுவாதீனமான சித்தத்தை அடிமைபோற் பந்தப்
படுத்தலையும் நிந்திக்கப்பழக்குகின்றது."

ஆகிலும் நாம் படபடப்புடன் நிந்தியா வண்ணம் காத்துக்
கொள்ளல் வேண்டும். மிகவும் நல்லவர்கள் ஆத்திரங்கொண்டு செய்
யவேண்டிய பாகத்தை உடைத்தாயிருக்க நேரிடுகின்றது. அவர்
கள் உண்மையாயிருக்கச்செய்யும் குணம் தானே, பெரும்பாலும்
அவர்களைப் பொறுமையற்றவர்களாகச் செய்கின்றது. "மனோசம்
பந்தமாய்க் கடவுளளித்த பாக்கியங்களிற் புத்திசம்பந்தமான பொறு

மைதான் மிகவும் அருமையானது. நாம் கற்றுக்கொள்ளவேண்டிய கடைசிப் பாடமாவது, நமக்குத்தானே அதிருசியமாகின்ற கஷ்டங் களில் நம்பிக்கை வைப்பது என்று மிஸ் ஜூலியா வெட்ஜ் உட் (Miss Julia-wedge-wocd) செப்புகின்றனள்.

பொறுமையற்ற படபடப்புக்குணத்தைச் சீர்திருத்துவதற்குச் சிறந்த கருவியாவது, விவேகமும் நம்வாழ்க்கையின் விரிவான அனு பவமும் அதிகப்படுவதேயாம். நல்லுணர்ச்சியை வளர்த்துக்கொண் டாற் சன்மார்க்கம்பற்றி அகப்பட்டுக்கொள்ளத்தக்க சிக்குமுக்குக ளினின்றும் தப்பித்துக்கொள்வது இயல்பாகின்றது. அந்த நல்லு ணர்ச்சியாவது முக்கியமாய்த் தன்னை உடையவரை உலகானுபவ மான காரியங்களில் நீதியும், தீர்மானமும், விவேகமும், தர்மமும் கலந்து நடக்கும்படி திறமைப்படுத்துகிற மனோசுபாவமாகின்றது. ஆதலால் அறியாமையும், கொஞ்சத்தனமுமுள்ள மனிதர்கள் இரக் கமும், பொறுமையு மற்றவர்களா யிருத்தல்போல, அறிவும் அனு பவமுமுள்ளவர்கள் மிகவும் சகிப்பும் பொறுமையுமுள்ளவர்களாக என்றுங் காணப்படுகின்றனர். பெருந்தன்மையும் உதாரத்துவமு முள்ள மனிதர்கள் தங்களுடைய அனுபவஞானத்திற்குத் தக்கவண் ணம், மற்றவர்கள் நல்லொழுக்கத்தை வஹிப்பதில் அசுந்தர்ப்பங்கள் வந்து மேலிடுவதற்கும், மனக்கவர்ச்சி முதலியதோஷங்களுக்கு இட ங்கொடுக்கத்தக்க பலஹீனமும் தவறத்தக்கதுமான, சுபாவங்களுமா கிய குறைகளையும் பிரதிகூலங்களையும் அவர்கள் உடைத்தாயிருப்ப தற்கும் போக்குவிடச் சம்மதப்படுகின்றனர். "நான் செய்திருக் கக்கூடாத குற்றத்தைப்பிறர் செய்திருப்பதாகக் காணவில்லை" என்று கீதி (geethe) என்பவர் கூறினர். அப்படியே விவேகமும் நன்மையு முள்ள மனிதன் ஒரு குற்றவாளியைப் பத்தாயத்தில் வைத்து டை பர்னு (Tyburn) க்கு இழுத்துச்செல்லக்கண்டபொழுது......... ஒழுக்கமானது பெரும்பாலும் நாம்தாமே செய்துகொள்ளும் தன்மையாகவே எப்பொழுதும் இருக்கும். உற்சாகமுள்ளவன் உல கத்தை உற்சாகமுள்ளதாகவும், துக்கமுள்ளவன் துக்கமுள்ளதாக வும் செய்துகொள்ளுகிறுன். நம்மைச்சுற்றி யிருப்பவர்களுடைய குணங்களில் நம்முடைய சொந்த சுபாவமே பிரதிபலித்திருக்கக்கா

ண்பது வழக்கம். நாம்தானே திருப்தியற்றவர்களாயிருப்பின் அவர்
களையும் அப்படியே பார்க்கின்றனம். நாம் அவர்கள்விஷயத்தில்
இரக்கமும் தர்மமுமின்றியிருப்பின் அவர்களும் நம் விஷயத்தில் அப்
படியே யிருப்பார்கள். கொஞ்சக்காலத்திற்குமுன்னர் சாயங்காலம்
உலாவித்திரும்பிவந்த ஒருமனிதன் தனக்குப்பின்னே ஒரு குரூபமா
ன பையன் வந்ததாகச்சந்திப்புக்குப் போய்வரும் ஓர் போலீஸ் சே
வகனிடம் முறையிட்டான். அது அவனுடைய சொந்தச்சாயையாக
வேயிருந்தது. மனுஷ்யவாழ்க்கையானது நம் ஒவ்வொருவருக்கும்
அப்படியேயிருப்பது வழக்கமாயிருக்கிலது. அனேகமாய் அது
நமது சொந்தபிரதிபலனாகவே யிருக்கிறது.

நாம் பிறருடன் சமாதானமாயிருந்து அவர்களுடைய மரியா
தையைக் காக்க விரும்பினால் அவர்களுடைய தன்மை விஷயத்தில்
மதிப்பை உடைத்தாயிருத்தல் வேண்டும். ஒவ்வொருமனிதனுக்கும்
உருவத்திலும் இலட்சணத்திலும் விசேஷம் இருப்பதுபோலவே
நடையிலும் ஒழுக்கத்திலும் விசேஷம் உண்டு. அவர்கள் நம்முடன்
நடந்துகொள்வதிற் சகிப்பை உடைத்தாயிருக்கும்படி அவர்களிடம்
எதிர்பார்க்கிறதைப்போல அவர்களுடன் நாமும் நடந்துகொள்வதிற்
சகிப்பை உடைத்தாயிருத்தல்வேண்டும். நம்முடைய சொந்தவிசே
ஷ குணங்கள் நமக்குத் தெரியாமலே நம்மிடமிருக்கின்றன. தென்
அமேரிக்காவில் ஓர் கிராமமுண்டு. அதிற் சகலமானவர்களுக்கும்
கண்டத்திற் சாதாரணமாய்ப் புடைப்பு இருந்தபடியால், அது இல்
லாதவர் குரூபியாய் மதிக்கப்படுகின்றனர். ஓர்நாள் இங்கிலீஷ்கார
ரின் கூட்டமானது அந்த ஸ்தலத்தின் வழியே போயிற்று. அப்
பொழுது ஒரு கூட்ட ஜனங்கள் முழுமையும், இந்த ஜனங்களைப்பா
ருங்கள்! பாருங்கள்!! அவர்களுக்குத் தொண்டைப்புடைப்புகள்
இல்லையென்று கூவிக்கொண்டு பரிகாசம் செய்யக் கூடினார்கள்.

அநேகர் தங்களையும் தங்களிடத்திலுள்ள விசேஷங்களையும்
பற்றி மற்ற ஜனங்கள் என்ன நினைக்கின்றனர் என்று அறிய மிகவும்
ஆத்திரமுள்ளவர்களா யிருக்கின்றனர். சிலர் கெட்ட குணத்தின்
பாகத்தை எடுத்துக்கொண்டு தாங்களே நிதானித்து மிகவும் கேவல
மானதை யூகிக்கின்றனர். ஆனாற் பிறர்பால் தர்மகுணமின்மையா

னது அதுஉள்ளபடியே இருக்குமிடத்து நம்மிடத்திற்றனே தர்மமும் நற்குணமின்மையின் பிரதிபலனாகத் தானிருப்பதாகப் பலதிருஷ்டாந்தங்களால் வெளியாகின்றது. நாம் நம்மைத்தானே தொந்தரவுக்குட்படுத்திக் கோடற்குக் காரணம் நமது சொந்தஎண்ணமாகவே பெரும்பாலும் சம்பவிக்கின்றது. நம்மைச் சூழ்ந்திருப்பவர்கள் நம்மைத் தர்ம ஹீனராய் நினைப்பினும், அவர்கள்பேரில் நாம் மிகுதியும் கோபித்துக்கொள்வதாற் காரியங்களைச் சீர்திருத்திக்கொள்ள மாட்டோம். அங்ஙனம்புரிவதால் நாம் அவர்களுடைய கெட்டசுபாவம் அல்லது வீண் எண்ணத்திற்கு நம்மை அனுவசியமாய் இலக்காக்கிக் கொள்ளத்தான் செய்கிறோம். நம்முடைய வாயினின்றும் புறப்படுகிற தீமையானது பெரும்பாலும் நம் மார்பினுள்ளே விழுகின்றது.

தன்வாழ்நாளின் செழிப்பான அனுபவத்தில் உதித்த ஞானநிறைந்ததும் ஆச்சரியகரமானதுமாய் அடியிற்காணப்பட்டபோதனையை பெரியவரும் நல்லவருமான தத்வஞானியாகிய பேரடே (Faraday) என்பவர் தன் இஷ்டராகிய தேர்ச்சிபெற்ற டின்டால் (Tyndall) என்பவருக்கு வரைந்த ஓர் கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். அதுவருமாறு "நான் ஒரு விருத்தன், இதுவரை அதிகமான அனுபவத்தைப் பெற்றிருக்கவேண்டியவன். நான் சொல்வதைக்கேளும். நான் இளமையாயிருக்குங்காலத்தில் ஜனங்களுடைய அபிப்பிராயத்தைப் பெரும்பாலும் மாறுபடக்கிரஹித்தேன். அவர்கள் அக்காலத்தில் அபிப்பிராயப்பட்டதாக நான் நினைத்தவண்ணம் அவர்கள் அபிப்பிராயப்படவில்லையென்றுணர்ந்தேன். மேலும் கோபக்குறியானவார்த்தைகளாகத் தோற்றினவிடத்து, நம் கிரஹணசக்தி கிஞ்சித்துமந்தமானதாகவும், பக்ஷமானவைகளாகவுந் தோற்றுமிடத்து, புத்திகிஞ்சித்துக்கூர்மையானதாகவும் இருப்பது நன்மையென்பதைப் பொதுவிதியாகவைத்துக்கொள்ளல்வேண்டும், யதார்த்தமான உண்மையானது, அந்தியத்தில் துலங்காமற்போகாது.

(இன்னும் வரும்.)

உ

திருச்சிற்றம்பலம்.

# சிதம்பரசுவாமிகள் சரிதம்.

(முற்றொடர்ச்சி.)

இனிச் சிதம்பரசுவாமிகள் மதுரையினின்றும் போந்து விருத்தாசலமடைந்து குமாரதேவர் நிஷ்டையிலிருக்கக் கண்டு, அவரைவலஞ்செய்து வணங்கி வடதிசைநோக்கிச் செல்லுகையில், "பொம்மைபாளையம்" என்னும் ஊரிலே, சதுரக்கள்ளிப்பாலையே உணவாகக்கொண்டிருக்கும் சிவாநுபூதிச் செல்வராகிய "பாலைய சுவாமிகள்" சிதம்பரசுவாமிகளது அநுபவசித்தியைக் கேள்வியுற்று அவரைப்பார்க்க விருப்பமுற்றிருக்கையில், தாமும் அவரைக்காணுமாறு அப்பாளையம் நோக்கி வருகையில், இருவரும் ஒருவரையொருவர் எதிர்வரக்கண்டு அளவளாவித் திருமடத்தின்கணிருந்து, சுபாநுபவத்தைக் குறித்து நடுநேரம் சம்பாஷித்துக்கொண்டிருந்து பின் ஸ்நானஞ்செய்து சிவார்ச்சனைமுடித்து, அவருடன் புசித்து விடைபெற்று கிழியனூர் வழிகொண்டு சென்றனர். அங்ஙனஞ் செல்லுமிடையில் அவ்வூர்ச் சோலையில் * பாவோடிக்கொண்டிருந்த

* பாவோடுதலென்பது:—நெய்வார் தொழிலினொன்று. இது செங்குந்தர் குலத்திற்குரியது. ஒருகாலத்து ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள் இம்மரபினர் பொருட்டு, தேவர், முனிவர்களை நெய்தற் கருவிகளாகவும், தாம் நெய்வோராகவுமிருந்து நெய்தற்றொழிலைச் செய்துகாட்டி, அக்குலத்தினர்க்கு ஜீவனார்த்தமாக வைத்துய்யுமாறு, கொடுத்ததாக ஓர் செய்யுள் காணப்படுகின்றது. அது வருமாறு:—

"செங்கண்மாலுந் தியந்தாமரையினால் வாங்கித்திங்கள் வட்டத்திழைத்துத்
தேவாலகாகவே சிலமுனிவர்பாவோட சேர்ந்தவிழை விழுதிதோய்த்து
பங்கயன்றன்முகம் படமரமதாகவே பச்சைமால் முன்றண்டதாய்ப்
பரிவாலகத்தியன் விழுதுகோலணியதாய்ப் பணிசேடன் வலிகயிறதாய்
வெங்கட்சடாமுனி விசைக்கோலதாய் வேதவிண்முனி மிதிப்பலகையாய்
மேலானமகதிமுனி நாடாவிலோட முன்விரித்த பாவதனைநெய்து
சங்கரன் மதலையிப்பவமிலாத்தொழிலைச் சமைத்துய்மினெனவிண்ணுளோர்
சயசயெனவாழ்த்தக்கையேற்றாடு கைக்கோளர்சருவகாலமும்வாழியே."

அன்றியும்,

"பானலச் செந்நாப் புலவன்செங் குந்தரைப் பார்த்த பின்னர்க்
கானலம் வாசி நலங்காண நெஞ்சங் கசிந்துருகி
நூனலம் பாநல மோடே கலைநல நோக்கியதன்
மேனல மென்ற பொருணலந் தேர்ந்து விளங்கினனே."

(செங்குந்தர் மரபு விளக்கம்.)

எனவும்,

"ஓயாம லுய்தொழிலி லேதென்ன வுயர்குறள் சொல்வள் ளுவர்க்குச்
செய்தொழில் கற்பித்தமைத்த சேட்டக்கை."

(செங்குந்தர் திருக்கைவழக்கம்.)

எனவும் வருமாற்றானறிக.

*

* செங்குந்தருள் இருவினையொப்பு மலபரிபாகமு நேரிட்டிருந்த ஒரு விதந்துவாகியநரைமூதாட்டி தம்மைக்கண்டு பணிந்துபசரித்திட்ட புற்கையமுதத்தைப் புசித்து, அம் மூதாட்டியின் வேண்டுகோட்கி யைந்து, சிலநாளங்குவசித்துப் பின்னர், "யாமிதுபோது ஜீர்ணோத் தாரணஞ்செய்யவேண்டிச்செல்கின்ற திருப்போரூர்க்குவருக" என்று கட்டளையிட்டுத்திருப்போரூராகிய பனங்காட்டையணுகி, அங்குவள் ளைப்பூடால் நிறைந்த ஓடையில் நீராடி, நியமங்கள் முற்றிப் பனங் காட்டின் நடுவில் ஒரு பெண்பனை மூலத்திற் சுயம்புவாய் மூளைத் திருந்தருளிய முருகக்கடவுளைத் தரிசித்துத் திருப்போரூர் பிரணவ மலைச்சாரலில் வேம்படிவிநாயகர் கோயிலில் வசித்திருந்தனரென்ப.

இங்ஙனம் வசிக்கும் நாட்களிலொன்றில், ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் குமாரதேவரைப்போல எழுந்தருளிவரக்கண்டு அச்சமுற்று விரைந்தோடித் திருவடி தொழுதுநின்று, அங்கயற்கணம்மை யருளி யதை விண்ணப்பஞ்செய்தனர். அதுகேட்டு அக்குருமூர்த்தி "ஆயின், யாமிருவரும் சுவாமியைத் தரிசிப்போம் வருக." என்றருளி, இரு வரும், பெண்பனையை அணுகா நிற்கையில் "சுவாமிகள், ஆசிரியரை நோக்கி, சுவாமி! ஆதியில் இவ்வாலயம் எவ்வாறிருந்தது." என, குமாரமூர்த்தி அவர்நெற்றியில் திருநீறுசாத்தித் திருவருள்நோக்கஞ் செய்து, "ஆலயம் முதலியவற்றைப் பார்ப்பாயாக" என்றனர்.

என்றவப்போழ்தே ஆலயம், கருப்பக்கிரகம், மண்டபம், மதில் கோபுரவாயில், தேவிமார் சந்நிதி, துவஜஸ்தம்பம், மாடவீதி, மடால யம், தீர்த்தமுதலிய யாவும், தமது கண்ணுக்கு இலக்காகக்கண்டு, அவையனைத்தும் சிற்பநூல் முறைப்படி சிறப்பாக விளங்குதலைக் குறித்து வியப்புற்றனர். ஆசிரியராய் எழுந்தருளிய மூர்த்தி அவ் வாலயத்துட் சீடருடன் புகுந்து மூலஸ்தானத்திற் சுயம்புவாய் வீற் றிருந்த தம்மைத்தாமே அஞ்சலி முகிழ்த்தாராயினர்.

அப்போது முருகக்கடவுளாகிய ஆசிரியரது திருவடிகளை எதி ராகக்கொண்டு வடதிசையாய்ச் சாஷ்டாங்கமாய்ச் சரணம்புரிந்து எழுவதற்குமுன், ஆசிரியராய் எழுந்தருளிய மூர்த்தி திருவுருக்கரந்

---

* செங்குந்தர் - பகைவரது உதிரத்தாற் சிவந்த ஈட்டியையுடையவர்.

தனர். சிதம்பரதேவர், கட்புலனாகிய ஆலயம் முதலிய யாவும் மறைந்து பனைமரத்தடியிற் சுவாமியைப் பழையபடியே இருக்கக் கண்டு, அந்த அற்புதத்தைக்குறித்துப் பரவசமடைந்து வியந்த சிந்தையராயினர்.

இங்ஙனம் தமது குருமூர்த்தியாய் எழுந்தருளித் தரிசனந்தந்த குமாரதெய்வத்தின் திருவருட் டிறத்தை நினைக்குந்தோறும், பேரானந்தப் பெருவாருதியிலாழ்ந்தி, மோக்ஷசாதனந்துய்த்தற்கு முருகன் அருள்கூட்டுமளவும், இத்தலத்தே வசித்திருத்தல் வேண்டுமெனக்கொண்ட மனத்தராய்ப் பிரபஞ்சத்தில் மாயாரூபமாக விளங்கும் பந்தபாசங்களில் மனத்தைப் புகவிடாது, அமலனருள் கூட்டப்பெற்றோர் உலகில் பித்தர் பேயர்போல் நடித்து,

> "வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்து விழிதுயின்று
> பார்த்தா லுலகத் தவர்போ லிருப்பர்பற் றற்றவரே"

என்று பகன்றுவைத்த பட்டினத்தடிகளின், உண்மைவாக்கைத் தழுவியவராய் அவ்விடத்தே வசிப்பாராயினர். இவ்வாறு ஆசிரியராய் வந்து ஆட்கொண்ட காரணத்தால் அந்நாள் தொடங்கிச் * சரணசம்பந்தம் நடந்து வருகின்றது.

இதன்பின், சிதம்பரசுவாமிகள் † "நெஞ்சுவிடுதூது" என்னும் பிரபந்தமியற்றி "அருணையிற்" குடிகொண்ட தமதுஆசிரியரான குமாரதேவர்க்கு அனுப்பிவிட்டு, முன்போல விநாயகர் கோயிலில் வசித்திருந்தன ரென்ப.

இவரிங்ஙனம் வேம்படி விநாயகர் கோயிலில் வசித்திருந்த சமயத்து முன், "திருப்பேரூரில்" வதிந்திருந்த ஞான குரவராகிய "சாந்தலிங்கசுவாமி"களிடத்துத் தமது ஆசிரியர் மூலமாகப் பெற்றுவந்த

---

* சரணசம்பந்தமெனப்படுவது குரு சீடனதுசிரசின்மேல் தமதுபாதங்களை வைத்து அருள்செய்தல் எனவறிக.

† நெஞ்சுவிடுதூது எனப்படுவது சிதம்பரசுவாமிகள் தமது மனத்தைக் குமாரதேவனென்னுஞ் சற்குருவின் பக்கல் தூதுவிடுவதாகப்பாடிய பிரபந்தம். அதன் ஈற்றில், "சற்குமரதேவன் றருங்குவளை மாலை நெஞ்சே, யிற்பெறவே வாங்கிவா வின்று" என்றது காண்க.

"வைராக்கியசதகம்" "வைராக்கியதீபம்" "அவிரோதவுந்தியார்" "கோலைமறுத்தல்" முதலான வேதாந்தசாத்திரங்களுக்குச் சம்பிரதாய விதிவழுவாத சிறந்த உரையியற்றி முடித்துப்பின், கண்ணுடைய வள்ளலாரியற்றிய, "ஒழிவிலொடுக்கம்" என்னும் அரியபெரிய ஞானநூலுக்குப் புலவோர் போற்றித்துதிக்கும் பெற்றியுடைத்தான திப்பிய உரையொன்று இயற்ற முயலுகையில், அந்நூலின் முதற்செய்யுளாகிய,

"வேதாகமப்பவுரி வீசுங்*களாசநிலை
ஆதாரவெற்பிலபிடேகம்—போதத்
திருளிலெழுபானுவென தொழிவிலின்பக்
கருணைபொழிவானெடுத்தகை."

எனக்காணப்படுஞ் செய்யுளில் "களாசம்" எனவரும் பதத்துக்குப் பொருள்தோன்றாது மயங்கி முருகக்கடவுளைப் பிரார்த்திக்க, அக்கடவுள் நரைமுதிர்ந்த ஓர் விருத்தகோலத்துடன் எதிர்தோன்றி பிரம்பை நீட்டி "இதனைக்கொள்வாய்" என்று கூறி மறைந்தனர். புலவர் பெரிதும்மகிழ்ந்து அதுதொடங்கி அந்நூலுக்கு உரையியற்றி இனிது முடித்திருந்தனரென்ப.

இன்னணம் சிதம்பரதேவர் அத்தலத்து வசித்துவருங்காலத்து, இவரது பெருமித குணமும், சிறந்த பத்திநெறியும், நிறைந்த கவிப்புலனும் நாடெங்கும் பரவ, அஃதுணர்ந்த அன்பர் பலரும் வந்து தரிசித்துத் தேவர் மகிமைகளை யுள்ளவாறுணர்ந்து, பணிந்து புகழ்ந்து போற்றியதால் பின்னும் சுவாமிகள் பெரும்புகழ் வானதியின் பெருக்கென நிலவத்தொடங்கியது. இதனிடையில் ஓர்நாள் சிதம்பரதேவர் மாலைக்கடன் முடித்தற்பொருட்டுப் பிரணவமலைச் சாரற்கணித்தாயுள்ள தீர்த்தத்திற்கு வருகையில் சில கள்வர்கள், சுவாமிகளணிந்திருந்த உருத்திராக்ககண்டிகை, பொன்பட்டாடை முதலிய ஆபரணங்களை அபகரித்துப்போவானெண்ணிச் சுவாமிகளை யணுகலும், திடீரெனக் கண்கள் தெரியாமல் மயங்கவும், அன்னோர்கள் திடுக்குற்ற மனத்தராய் நடுங்கிச் சுவாமிகளைநோக்கித் தாங்கள் இன்

* களசம் – பிரம்பு-

ஞூரென்றும் செய்யவந்த காரியம் இன்னதென்றுஞ் சொல்லி நமஸ்கரித்து நாங்களபசாரப்பட்டதை மன்னித்தருள வேண்டுமென்று சரணமடைய, அன்பே ஒருருவெனத்தோன்றிய சைவசமயப்பெரியராகிய சுவாமிகள் திருவுளமிரங்கியவராய்க் கள்வரை நோக்கி! "நீங்களிதுவரையிற் சம்பாதித்தபொருளிற் செலவுசெய்தது போக மீந்துள்ள பொருளையெல்லாம் குன்றமெறிந்த நங் குமாரக்கடவுளுக்கு அர்ப்பண மாக்குவீர்களாயின் உங்கட்குக் கண்கள் தெரியுமாறு சுவாமி கடாக்ஷிப்பார்" என்று கூற, "அவ்வாறே அர்ப்பணஞ் செய்தோ" மென்று சொன்னவுடனே மறைந்த கண்கள் நன்றாய்த் தெரியவே, சுவாமிகளடிபணிந்தெழுந்து தோத்திரஞ்செய்து பொருளைக் கொணர்ந்து தந்து போயினர்.

பின்னொருசமயம், இச்சுவாமிகள் அவ்வூரில் பிக்ஷைவாங்கியுண்டு வசிக்கு நாட்களிலொன்றில், இரவுஒருவீட்டுப் புறந்திண்ணையிற் படுத்துத் துயில்கொளுஞ் சமயத்து அன்பர் உளக்குறையை அகற்றத்தோன்றிய அறுமுகவன் றொண்டனின் அன்பின்றிறத்தை உலகினர்க் குணர்த்துவானெண்ணி, ஆலயத்தில் தமது திருமேனியின்மீது அன்பர்கள் சாத்திவைத்திருந்த பட்டாடையைச் சிதம்பரதேவர்க்குக் குளிர்நலியாதபடி அவருடம்பின்மேற் போர்த்துவிட்டுச் சென்றனராக, பின்பு அந்த அதிசயத்தைக்கண்ட அனைவரும் அவரைச் சுவாமியின் விசேஷாநுக்கிரகம் பெற்றவரென்று அறிந்து கொண்டாடி மகிழ்ந்து உபசரிப்பாராயினர்.

மற்றொருசமயம், திருப்போரூர்க்கு வடபாலுள்ள "கண்ணுவப்பேடு" என்னுங் கிராமத்தில் நெடுநாளாய்க் கண்தெரியாதிருந்த ஓர் குயவன் தனது பிள்ளைகளாற் சுவாமிகளின் மகிமையைக்கேட்டு அவரிடம் வந்து அட்டாங்க நிலந்தோய வீழ்ந்து, பணிவுதோன்றத் தழுதழுத்து வாழ்த்திக் குறையிரக்க, கருணைக்கோருறைவிடமெனத் திகழும் சுவாமிகள் அன்புகூர்ந்தவராய் "நீர் விரும்பியபடி ஸ்ரீசுப்பிரமணியக் கடவுள் கடாட்சித்தருளுக" எனச் சிந்தித்தவுடன், அவனுக்குக் கண்கள் தெரிந்தன. அக்குலாலனது வேண்டுகோளால் அவனது சிறுகுடிலின்கண் ஓர் புளியமரநீழலில், நெகிடிவளர்த்துக் கொண்டு வீற்றிருந்து, அதன் வடகிழக்கிலுள்ள "காலவாக்கம்"

என்னும் ஊரிலிருந்து வந்து சரணமடைந்த ஓர் முடவனைத் திருநீற்றால் பவித்திரனாக்கி, மீண்டும் அநேகர்க்குச் சுரம், சூலை, வயிற்றுவலி, மகோதரம், குடல்வாதம், குஷ்டம் முதலிய வன்னோய்களையும் நெகிடித் திருநீற்றால் நிவர்த்திசெய்தனரென்ப.

இங்ஙனம் பல அற்புதங்களை விளைத்தும், அன்பர் பலர் போற்றிப் புகழ்ந்து கொண்டாடிச் சிறப்பிக்கத்திகழ்ந்தும் வருங்காலத்து, ஆதியில் தாம் உத்தேசித்திருந்த ஆலயத்திருப்பணியை நிறைவேற்ற நினைந்து தாம் அளித்ததிருநீற்றானும் திருவருள் நோக்கத்தானும் கொடுந்துன்பம்நீங்கிச் சுகம்பெற்ற பலருஞ் செலுத்திய காணிக்கைகளையும் முன்னர்க் கள்வர் தந்துபோன திரவியமுதலியவற்றையுங் கொண்டு தாமும் அடிமையாய் ஏவற் பணிசெய்தும் அதனால் வந்த வருவாயைக்கொண்டும் ஆலயத் திருப்பணியை ஆரம்பித்து முதன் முதல் ஆலயகர்ப்பக்கிருகம் கட்டத்தொடங்கினர். அதுசமயம் முற்கூறிய கிளியனூர் மூதாட்டி தனது சரீரப் பிரையாசையால் சேகரித்த ஒரு பொன்னைக் காணிக்கையாக வைத்துத்தண்டமிட சுவாமிகள் அம்மூதாட்டியினது பேரன்பையுள்ளுவந்து அப்பொன்னைத் திருக்கரங்களாலேற்று நெற்றியிலும் சிரத்திலும் கண்களிலும் வைத்து வைத்து ஆனந்தமுற்று அதனைக்கர்ப்பகிருகத்தின் * சிகர வேலைக்கு உபயோகித்தனர். அப்போது தரிசனார்த்தம் அங்குவந்த "தஞ்சாவூரரசன்" அவ்வற்புதத்தைக்கண்டு இரண்டுபை வராகன் கொண்டுவந்து காணிக்கையாகச்செலுத்த, எட்டுநாளைக்குப்பின்னர் திருவுளந்திரும்பி அதனைத் திருப்பணிக்கு உபயோகித்துகொள்ளும்படி கட்டளையிட்டனரென்ப.

(இன்னும் வரும்.)

சி. கு. நாராயணசாமி முதலியார்.

கோவை.

---

* இதனைக் குமாரக்கடவுள் திருமேனித்தொண்டுக்குபயோகப்படுத்தினரெனக் கூறுவாருமுளர்.

உ

திருச்சிற்றம்பலம்.

# திருக்குறளாராய்ச்சி.

(முற்றொடர்ச்சி.)

௫௪௩. அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

இதன் விசேடவுரையில் "மாதவர் நோன்பு மடவார்கற்புங் காவலன் காவலன்றித் தங்காவாகலின் ஈண்டறமென்றது அவை யொழிந்தவற்றை" என்றச்சுப்பிரதியிலுள்ளவாக்கியம், சில ஏடுகளில் "மாதவர் நோன்பு மடவார்கற்புங் காவலன்காவலன்றித் தங்காவலானாகலின் ஈண்டறமென்றது அவையொழிந்தவற்றை"—என்றுகாணப் படுகிறது.

ஆசிரியர், மேல் ௫௪௨-ம் குறளாற் குடிகளின் வாழ்க்கைக்குச் செங்கோலே காரணம் என்று செங்கோலின் சிறப்புக்கூறி, அச்செங்கோல் (குடிகளின் வாழ்க்கைக்குக்காரணமாவதன்றித்) தோற்றமுமிறுதியுமற்று அநாதியாய்ச்சிறந்துள்ள வேதம் அறம் என்பவற்றிற்குங்கூட அவை நடைபெறுதற்குக்காரணமாகிய அத்துணையேனும் தன்னடைபேற்றினுக்குக்காரணமாகப் பிறிதொன்றையும் வேண்டாது நிலைபெற்றதுஎன அதன் ஒப்புயர்வற்றசிறப்பு இக்குறளாற்கூறுகின்றாரென்பது, இக்குறளின் உரையாலும் விசேடவுரையாலும் நன்குபுலப்படுகின்றது.

இதனுள், அறங்களெல்லாம் நடைபெறுதற்குச் செங்கோலே காரணம் எனப்பொதுப்படக் கூறியிருப்பினும், "உரனென்னுந்தோட்டியானோரைந்துங்காப்பான்" (கு-௨௪) எனவும், "தற்காத்து" (கு-௫௬.) "மகளிர், நிறைகாக்குங்காப்பேதலை" (கு-௫௭.) "ஒருமைமகளிரேபோல" (கு-௯௭௪.) எனவும் கூறியவாற்றால் தம்மனத்தினாலே தம்மைத்தாமே காத்துக்கொள்ளுங் காவலானாகும் மாதவர் நோன்பு மடவார்கற்பு என்னுமிரண்டுஞ் செங்கோலில்வழியும் பிறகலாதாழ்

வார், சீதாபிராட்டியார், கண்ணகி முதலாயினோர்மாட்டு நிகழக்காண்டலின், ஏற்புழிக்கோடலான் அவ்விரண்டையுமொழித்துப் பிறவறங்களையே கொள்ளவேண்டுமென்பார் "மாதவர்நோன்புமடவார்கற்பும்" என்னும் வாக்கியங்கூறுகின்றாராகலின் அச்சுப்பிரதிப்பாடம் அவ்வாறு பொருள்கொள்ளற்கேலாமையான் ஏட்டுப்பாடமே பொருத்தமுடைத்தாம்.

இனி ஏட்டுப்பாடக்கருத்து "மாதவர்நோன்புமடவார்கற்புங், காவலன்காவலின்றெனினின்றால்" என்னும் மணிமேகலைவாக்கியக் கருத்தோடு மாறுபடுகிறதனாற் கொள்ளத்தக்கதன்றெனின்;—செய்யுள்நடையை வசனத்தில் பொருந்திய இடங்களில் அழகாக அமைத்துக்கூறுதல் ஆசிரியர் பரிமேலழகர்வழக்கமாகலின் அவ்வழக்குப்படி யீண்டுங்கூறுவார், இவ்விஷயத்தில் தங்கருத்து வேறுபாடுடைமை தோன்ற மணிமேகலைவாக்கியத்தூ ஈற்றிலுள்ள "காவலின்றெனினின்றால்" என்பதைமாற்றிக் "காவலன்றித்தங்காவலானாகலின்" என்று கூறினார்; ஆகலான் இதுவேகொள்ளத்தக்கதாமென்க. ஈண்டுக்கருத்துவேறுபாடின்றேல், "பொருளளவு 'தான்சிறிதாயினுந்தக்கார்கைப்பட்டக்கால், வான்சிறிதாப்போர்த்துவிடு'மாகலின்" எனவும், "ஈட்டியவொண்பொருளைக், காத்தலுமாங்கே கடுந்துன்ப'மாகலின்"எனவும் அஎ, அஅ-ம் குறளுரைகளிற் கூறியவண்ணமே ஈண்டும் "காவலன் காவலின்றெனின்றாகலின்" என்று கூறியிருப்பார்; அவ்வாறு கூறின்பின்னுள்ள "ஈண்டறமென்றது அவையொழிந்தவற்றை" என்பதனோடும், இதன் பின்னுள்ள "வேதமுமறனுமனாதியாயினும்" என்னும் வாக்கியத்தோடும் மாறுபட்டுப் பயனில் கூற்றாய்முடியும்.

ஆகவே ஏட்டுப்பாடமாகிய "மாதவர்நோன்புமடவார்கற்புங்காவலன்காவலன்றித் தங்காவலானாகலின் ஈண்டறமென்றது அவையொழிந்தவற்றை" என்பதே ஆசிரியர் பரிமேலழகரெழுதியவாக்கியமெனக் கொள்ளற்பாற்றென்பதாம்.

ருஅரு. கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று.

இதன் விசேடவுரையில் "கடாவென்பது கடுக்கும்பெயரெச்சத்தெதிர்மறை" என்றொருவாக்கியம் அச்சிடப்பட்டிருக்கிறது. இதில்

"கடுக்கும்பெயரெச்சம்" என்பதற்குப் பொருள்விளங்காமையானும் "கடுக்கும் என்னும் பெயரெச்சத்தெதிர்மறை" யென ஏடுகளிற்காணப்படுதலானும் "கடாவென்பது கடுக்கும் என்னும் பெயரெச்சத்தெதிர்மறை" யென்றேபடிக்கவேண்டுமென்பதாம்.

சூடுடு. எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.

இதன்விசேடவுரையிற்றில் "பிற்றொடர்தற்குச் செய்வானாயின் அவைபோல்வனவுஞ் செய்யாமை நன்றெனப்பிறரெல்லாமியைய பறவுரைத்தார்" எனவும் "பிற்றொடாதற்கு"......உரைத்தார்," எனவும் அச்சுப்பிரதிகளில் உள்ளவாக்கியம் சில ஏடுகளில் "பிற்றொடர்க்குச்............உரைத்தார்" எனக்காணப்படுகிறது. இப்பாடபேதங்கள் இவ்வாக்கியத்தின் முதற்சொல்லளவிலேயாம். சில ஏடுகளில், "பிறறொடாதறகு......உரைத்தார்" எனக்காணப்படுவதேமுன்னைய இரண்டு பாடத்திற்குங்காரணம். அது 'பிற்றொடர்தற்கு' எனவும் 'பிற்றொடாதற்கு' எனவும் படிக்க இடங்கொடுக்குமென்பது, ஏட்டுப் பழக்கமுள்ளவர்களுக்கெல்லாமினிது புலனும் இவற்றுள் 'பிற்றொடர்தற்கு' எனனும்பாடம் பொருட்கியைபின்மையின் கொள்ளத்தக்கதன்று. பின்னிரண்டுபாடமும் பொருளால் வேறுபாடிலவேனும் 'பிற்றொடாதற்கு' என்பதன்கண் 'அது' என்பதுபொருளின்றி நின்றுவற்றுதலோடு, படிப்பவர்கள் மயக்கவுஞ்செய்தலின் "பிற்றொடர்க்குச்........உரைத்தார்" என்னும் பாடமே இயைபுடைத்தாம்.

இனி "பிற்றொடர்க்குச் 'செய்வானாயினவை போல்வனவுஞ் செய்யாமை நன்'றெனப் பிறரெல்லாமியைபபறவுரைத்தார்" என்பதன்பொருள் ;— பிற்றொடர்க்கு என்றது - இக்குறளை "எற்றென் றிரங்குவசெய்யற்க" எனவும், "செய்வானேன்மற்றன்ன செய்யாமைநன்று" எனவும் இருதொடராகப் பிரித்துப்பொருள்கூறியவற்றுட் பிற்றொடராகிய "செய்வானேன் மற்றன்னசெய்யாமை நன்று" என்பதற்கு என்றவாறு. "செய்வானாயின் அவைபோல்வனவுஞ் செய்யாமை நன்று என" என்றது—ஒருகால் எற்றென் றிரங்கும் வினைகளைச் செய்வானாயின் பின் அவைபோல்வனவற்றையுஞ் செய்

யாமை நன்று என்று என்றவாறு; இது அநுவாதம். பிறரெல்லாம் - தருமர், மணக்குடவர் முதலிய வுரையாசிரியர்களெல்லாரும், இயைபற - அதிகாரத்தோடு பொருந்தாமல். உரைத்தார்-என்க.

எனவே மேலேகாட்டிய ஏட்டுப்பாடமே கொள்ளத்தக்கதென்பது போதரும்.

எருச. அறனீனுமின்பமுமீனுந்திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

இதன் விசேடவுரையில் "இலணுகவென்பது இன்றியெனத்திரிந்து நின்றது" என்றச்சுப்பிரதிகளிலுள்ள வாக்கியம் சில ஏடுகளில் "விரவுவினையாயவின்றி யென்பதிலணுக வெனத் திரிந்து நின்றது" என்று காணப்படுகிறது.

இன்றியென்பது இருதிணைப்பொதுவினையாகலன், ஆசிரியர் உரையில் 'தீதின்றி' என்பதற்கு (அரசன்) கொடுங்கோன்மையிலணுக எனஎழுதி, "அதனை விரவுவினை (இருதிணைப்பொதுவினை) யாய் இன்றியென்பது இலணுக எனத்திரிந்து நின்றது என்னும் வாக்கியத்தால் விளக்குகின்றார். ஈண்டுத்திரிந்து நிற்றல் - பொதுமையிற்பிரிந்து உயர்திணை யுணர்த்திநிற்றல். இதனை "முன்னிலைவியங்கோள் வினையெஞ்சுகிளவி,....................அம்முறை நின்ற வாயெண் கிளவியும், * திரிபுவேறுபடூஉஞ் செய்தியவாகி, யிருதிணைச்சொற்கு மோரன்ன வுரிமைய" என்னும் (தொல்-சொல் - வினை-உரு) சூத்திரத்தானும் அதன் சேனவரையருரையானும் அறியலாம். இவ்வாறுசெம்பொருள் கொள்ளக்கிடக்குமிடத்து அதனைவிட்டு "இலணுகவென்பது இன்றியெனத்திரிந்து நின்றது" எனக் கொள்ளுதல் கூடாமையின் "விரவுவினையாய இன்றி யென்பது இலணுகவெனத்திரிந்து நின்றது" என்னும் ஏட்டுப்பாடமே கொள்ளத்தக்கதாம்.

எருஅ. குன்றேறி யானைப்போர் கண்டற்றாற்றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

---

* "செந்தமிழ்" தொகுதி-டு, பகுதி-ந, கஙச-ம் பக்கத்திறுபார்க்க.

இதன் விசேடவுரைத் தொடக்கத்தில் "கைத்துண்டாகவொன்று செய்வானெனக் கூட்டுக." என்றொரு வாக்கியம் ஏடுகளிற் காணப்படுகின்றது. ஆசிரியர் அவ்வாறு கொண்டுகூட்டி உரைகூறியிருத்தலானும், "ஒன்றென்பது வினையாதல் செய்வானென்றதானுற் பெற்றும்" எனப் பின்னர்க்காணப்படும் வாக்கியத்தானும் "கைத்துண்டாக வொன்று செய்வானெனக்கூட்டுக" என்னும் வாக்கியம் விசேடவுரைத் தொடக்கத்தில் இருக்கத்தக்கதேயாம் என்பதுபோதரும்.

எஎக. என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்.

இதன் உரையில் "தெவ்விர் என்னைமுன்னின்று கன்னின்றவர் பலர்—என்பதற்கு "பகைவீர் இன்றிங் கென்றலைவனெதிர் போரேற்றுநின்று அவன்வேல்வாய்வீழ்ந்துபின்கல்லின் கண்ணே நின்றவீரர் பலர்" என்றச்சிடப்பட்டிருக்கிறது. இவ்வாக்கியத்துள்ள 'இன்றிங்கு' என்பது சில ஏடுகளில் 'இன்றினூங்கு' எனக் காணப்படுகிறது.

"இப்பாட்டு நெடுமொழிவஞ்சி" என்று ஆசிரியர் விசேடவுரையிற் கூறியிருக்கிறார். நெடுமொழிவஞ்சியென்பது ஒருவீரன் போர்க்களத்தே தன்னரசனுக்கு மாறேற்று வந்துநின்றுள்ள படைவீரரைப் பார்த்துத் தன்னாண்மையை யறியாதாரை யறிவித்தலாம். அன்றியும், போர்முடிந்தபின்னரே அற்றைப்போரிலிறந்த வீரருக்குக்கல்நடுதல்கூடும். இங்கே 'கன்னின்றவர் பல'ரென்றதனுல் அற்றைநாளின் முன்னே நடந்தபோர்களில் எதிர்த்து இறந்து கல்லின்கண்ணே நின்றவரைக் கூறினும். ஆகவே 'இன்றினூங்கு' என்பதே பொருத்தமுடைத்தாம். இன்றினூங்கு—இன்றெதிர்த்து நின்றுள்ள வுங்களினுமதிகமாக. இதனுல், அன்றெதிர்த்து நின்றவர் தொகையினும் முன்னாட்களிலெதிர்த்து நின்றவர் தொகையதிகம் என்பதைக் கூறினனென்பதும் புலப்படுகின்றது; 'இன்றிங்கு' என்னின் இவ்விடயம் புலப்படாதாம்.

மேலேகண்ட காரணங்களால் "பகைவீர் இன்றினூங்கென்றலைவனெதிர்போரேற்றுநின்று அவன்வேல்வாய்வீழ்ந்து பின்கல்லின்

கண்ணேநின்ற வீரர்பலர்" என்பதே பொருட் சிறப்புடையதாக லான் அவ்வாறே படிக்கவேண்டுமென்பதாம்.

எகஉ ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான்கேண்மை கடைமுறை
தான்சாந்துயரந்தரும்.

இதன் உரையில் 'ஆய்ந்தாய்ந்து கேண்மைகொள்ளாதான்' என்பதற்கு 'குணமுஞ் செய்கையு நல்லனென்பதும் அல்லனென்பதும் பலகாலாராய்ந்தும் பலவாற்ருனாராய்ந்தும் ஒருவனேடு நட்பு கொள்ளாதவன்' என்றச்சிடப்பட்டிருக்கிறது. இதற்குச் சிலஏடுகளில் 'குணமுஞ்செய்கையு நல்லனென்பது பலகாலும் பலவாற்ருனுமாராய்ந்து ஒருவனேடு நட்புக்கொள்ளாதவன்' என்று காணப்படுகிறது. ஈண்டுப்பொருள்நோக்கம் நட்புக்கொள்ளுதற்கண்ணேயாகலின், ஆராயவேண்டியதும் குணமுஞ்செய்கையும் நல்லன் என்பதேயாம். 'ஆய்ந்தாய்ந்த' என்னும் அடுக்குக்குப் 'பலகாலும் பலவாற்ருனும் ஆராய்ந்து' என்ருர். எனவே 'குணமுஞ்செய்கையும் நல்லன் என்பது பலகாலும் பலவாற்ருனுமாராய்ந்து ஒருவனேடு நட்புக்கொள்ளாதவன்' என்னும் ஏட்டுப்பாடமே பொருட்சிறப்புடையதென்பதுபோதரும். இதனே, உற்றுநோக்குவார்க்கு "(ஆராயாது) குணமுஞ் செயலுந்தீயானெடுகொள்ளின் அவற்குவரும் பகைமையெல்லாந் தன் மேலவாய்ப்பின் அவற்ருனிறந்துவிடுமென்பதாம்" என்னும் விசேடவுரைவாக்கியமும் வலியுறுத்தும்.

அஎக. பகையென்னும் பண்பிலதனை யொருவ
னகையேயும் வேண்டற்பாற் றன்று.

இதன் உரையில் 'ஒருவன் நகையேயும் வேண்டற்பாற்றன்று' என்பதற்கு 'ஒருவன்விளையாட்டின்கண்ணேயாயினும் விரும்புதலியற்கைத் தன்றேன்றுகூறும் நீதிநூல்' என்பது அச்சுப்பிரதிப்பாடம். ஏடுகளில் இதற்கு 'ஒருவன் விளையாட்டின்கண்ணேயாயினும் விரும்புதலியற்கைத்தன்று நீதிநூல்' என்று காணப்படுகிறது. 'அதனை விளையாட்டின்கண் வேண்டினுஞ்செற்றமே விளைந்து மெய்யாமாகலின் நகையேயுமென்றும், வேண்டாமை தொல்லையோர் துணிவென்பார் நீதிநூல்மேல்வைத்துங் கூறினர்' என ஆசிரியர் விசேடவுரை

கூறுதலான் இதற்கேற்ப "ஒருவன் விளையாட்டின்கண்ணேயாயினும் விரும்புதலியற்கைத்தன்று நீதிநூல்" என்றே உரைகூறியிருக்கவேண்டும். அதனால் ஏட்டுப்பாடமே கொள்ளத்தக்கதாம்.

அஅஉ. வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.

இதன் உரையில் 'வாள்போல் பகைவரை அஞ்சற்க' என்பதற்கு 'வாள்போல எறிதுமென்று வெளிப்பட்டுநிற்கும் பகைவரை யஞ்சாதொழிக' என்றச்சிடப்பட்டிருக்கிறது. இதற்குப்பல ஏடுகளில் 'வாள்போல எறிதுமென்று வெளிப்பட்டுநிற்கும் பகைவர்பகையினையஞ்சாதொழிக' என்று காணப்படுகிறது. "மறைந்துநிற்கும் பகைவர்நட்பினை அஞ்சுக" என்று பின்னர் வருதலின் அதற்கேற்ப முன்னர் 'வெளிப்பட்டுநிற்கும் பகைவர்பகையினை அஞ்சாதொழிக' என ஆகுபெயர்ப்பொருள் கொள்ளுதலே பொருத்தமுடைத்தாம். இதனை வலியுறுத்தவிசேடவுரைத்தொடக்கத்திலே "பகைவர் ஆகுபெயர்" என்றொருவாக்கியமும் ஏடுகளிற்காணப்படுகிறது. இவ்வாக்கியத்தையடுத்து "முன்னேயறிந்துகாக்கப்படுதலான்" என்றுதொடங்கியுள்ள வாக்கியத்துக் 'காக்கப்படுதலான்' என்பதும் பகைவர் பகையினையே சுட்டுதல் காண்க.

கககஉ. பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின்மகளிர்
நயன்றூக்கி நள்ளாவிடல்.

இக்குறளிலுள்ள 'நள்ளாவிடல்' என்பது சிலஏடுகளில் 'நள்ளார்விடல்' என்று காணப்படுகிறது. "ஒல்லுங்கருமமுடற்றுபவர்கேண்மை, சொல்லாடார் சோரவிடல்" (அகஅ.) என்புழிப்போல ஈண்டும் 'நள்ளார்விடல்' எனமுற்றெச்சமாக் கூறலே சிறப்புடைத்தாம்.

இனியிதன் விசேடவுரைவாக்கியத்தீற்றில் அச்சிடப்பட்டுள்ள "அவ்வறிவு அவரைவிடுதற்கு உபாயமென்பது தோன்றப்பின்னள்ளாவிடல் என்றுங்கூறினார்" என்பது அச்சுப்பிரதிகளிலுள்ளவண்ணம் தமிழ்ச்சங்கத்துள்ள ஏடுகள் ஒன்றிலேனுங் காணப்பட்டிலதே. "அவ்வறிவரை விடுதற்கருமை தோன்றப்பின்னள்ளார்விடல் என்று

ங்கூறினர்" என்று சிலஏடுகளிற் காணப்படுகிறது; (சில ஏடுகளில் இரண்டோரெழுத்துக் கூட்டியுங்குறைத்துமெழுதப் பட்டுப் பொருளறியவிடமின்றிக்கிடக்கின்றது.) இதனுள் 'அவ்வறிவரை விடுதற் கருமை' யாவது—அவர்க்கு அது சாதிதருமமாதலே நூலானேயன்றி அவர் செயலானும் அறியும் அறிவுண்டாகும்வரை அவர்நட்புவிடுதற் கருமை. 'பின் நள்ளார்விடல் என்றுங்கூறினர்' என்றிருத்தலினாலே 'விடுதற்கு' என்பது அவர்நட்பையே குறிக்கும். இதனால், "அவ்வறிவு அவரைவிடுதற்கு உபாயமென்பது தோன்றப்பின்னள்ளாவிடல் என்றுங் கூறினர்" என்னும்பாடங்கொள்ளுதல் உசிதமின்மைபெறப் படும். அன்றியும், அவரைவிடுதற்குபாயம் இக்குறளிற் கூறப்பட்டதென்பது ஆசிரியர் கருத்தாகுமேல், ௩௫௦-ம் குறளில் "அப்பற்று விடுதற்குபாயம் இதனாற்கூறப்பட்டது" என்றதுபோல இதன்ஈற்றிலும் "இதனான் அவரைவிடுதற்குபாயங் கூறப்பட்டது" என்பர். அவ்வாறு ஒன்றுங் கூறாதுவிட்டு அடுத்தகுறளீற்றில் "இவைமூன்று பாட்டானும் அவர்சொல்லும் செயலும் பொய்யென்பது கூறப்பட்டது," என்று கூறுகின்றார். இதனானும் அப்பாடம் உசிதமில்லாததென்பதுபோதரும்.

ஆகவே ஏட்டுப்பாடமாகிய "அவ்வறிவரை விடுதற்கருமை தோன்றப் பின்னள்ளார்விடல் என்றுங்கூறினர்" என்பதே சிறப்புடைத்தாம். இதனிலுள்ள 'நள்ளார்விடல் என்றுங்கூறினர்' என்னும் அனுவாதமும் மூலத்து 'நள்ளார்விடல்' என்னும் பாடத்தை நிலையுறுத்தும்.

(இன்னும் வரும்.)

அ. கோபாலையன்.

திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராண அரும்பத விளக்கம்.

[பழைய ஏட்டினின்று எடுக்கப்பட்டது.]

(முற்றொடர்ச்சி.)

(௩௩௭) பெரியகடலினும் மிகமுழங்கிவிளங்கும் மதத்தை யுடைய யானையை யுரித்துப் பொருந்தியதோலை அணிந்தவருடைய பக்கத்திலே சூழ்வோர்நெருங்குதலால் வீதிவிடங்கப்பெருமான் மகிமைஞ் செல்வத்தையுடைய திருவாரூரினெருவீதியிலே சிவலோகம் முழுதுங்காண உள்ளது.

(௩௩௮) நம்பியினுடைய தூதரானவர் பரவையாருடைய அழகிய இரத்தினமழுத்திய வாயிலைக்குறுகுவாராய் முன்னரே ஒருசேரத் தம்பக்கத்தே அணைந்தோர் புறத்தே நிற்ப.

(௩௩௯) செறியவடைத்த கதவமதன்முன்பு - நெருங்கப்பூட்டிய கதவத்தின் முன்னரே. சிறிதுந்துயிலாது நித்திரைவிழித்தயர்வாருடைய திருமுன்னே.

(௩௪0) இளம்பிறைவாழ்கின்ற சடைமுடியையுடையாரைப் பொருந்திய பூசையின் தொண்டைச்செய்யும் ஆதிசைவர் அத்தயாமத்தில் இங்கேவந்ததென்னையோவென்று பயத்தைப்பொருந்தி உமாதேவியைப்பாதி வடிவிலுடைய சிவனுவதறியாதே எண்ணாட்பிறை போன்ற நெற்றியையுடைய பரவையாரும் பதைத்துவந்து கதவைத் திறந்தார்.

(௩௪௧) பொருந்திய உரிமையையுடைய சுந்தரமூர்த்தி நாயனாரது தூதராய் வாயிலின்முன்னே நின்றவரைக்கண்டு வணங்கி முழுதும் உறங்குகின்ற அத்தயாமத்தில் அடியேனையாளுஞ் சிவபெருமானிங் கெழுந்தருளினாற்போல அழகிய நூலையணிந்த மார்பையுடையவரே, எய்தவேண்டிய தென்னையென்றார். வாயிற்றூதர் என்பதில் வாயில் என்னும்மொழி தூதரைவிசேடித்து நின்றது.

(௩சஉ ஆயிரம் முகங்கொண்டு உலகத்தை யழிக்கவந்த கங்காநதியை மறைத்த சடையை மறைத்த சிவபெருமானாகிய அந்தணர் அருளிச்செய்வார்.

(௩சச) பங்குனிஉற்சவத்திற்கு முன்னரேபோலப் பொருள்கொண்டு வருவாராய். சங்கிலித்தொடக்கைப் பொருந்திஞேருக்கு.

(௩சடு) வருத்தத்தை ஒழிதற்கல்லவா.

(௩சசு) ஒற்றியூர் உறுதி பெற்றார் - ஒற்றியூரை அறுதிபெற்றார்.

(௩சஎ) நகையும் உட்கொண்டு. திருவிளையாட்டின் மேவி-திருவிளையாட்டில் விரும்பி.

(௩சஅ) சிவபெருமானாகிய தூதரைப் போகும்படிவிட்டு நல்லநெற்றியை யுடையாளது புலவியை நீக்கி. விருப்பத்தோடு இசைவைக் கொண்டுவருவதையே.

(௩ருo) வழியிலெதிர் கொள்ளச் செல்வர். மன்மதன் பொழிகின்ற பூமழை வீழ.

(௩ருக) மகிழ்ச்சியாலிரவு பகலாய்த்தோன்ற.

(௩ருச) வண்ணத்தையும் அடியாளான பரவையா? மறுப்பாள், நாங்கள் அடிமைக்கு எண்ண ஆர் என்பதை இன்றறிவித்தளென்று.

(௩ருரு) மார்க்கண்டேயனாகிய பார்ப்பானப்புதல்வனுக்காக யமனைக் கொன்று அப்புதல்வனை நிலை நிறுத்தினீர். நான் உமக்கு மிகை இன்றைக்காகில் என்னதான் செய்வீர் இதுவும் போதாதென்றார்.

(௩சுo) விடையை எம்பெருமான் முன் என்செய்ய மறுத்தேனென்பார்.

(௩சுஅ) நம்பிதூதர் - சிவன்.

(௩சுகூ) அடியையும் முடியையும் விட்டுணுவும் பிரமாவும் நாடுதற்கு அருளாதார்.

(௩எச) பந்தமும் வீடும் நீர் அருள்செய்யுமாறே இப்பொழு துஞ்செய்தீர்.

(௩அ௨) ஒருவருள் ஒருவரை விரும்பும்.

(௩அஎ) சிவபெருமான் அடிமையா முறையராகி வந்தாரா? அங்ஙனம் வந்தாராயின் இந்திரனும் விட்டுணுவும் பிரமாவும் நேரே அறியவொண்ணாத எம்பெருமானிசைந்தால்தூதாக ஏவப்பெறுவதா? இதனுக்கு மனம் நடுங்காதவனை யான் எதிரேகாணும் நாள் என்னாளென்று.

(௩அஅ) நெருங்கிய வைரம்பற்றிவிழ்மு மனத்தராய்.

(௩அகூ) அழிவில்லாத புகழோடுயரும் ஏயர்கோன் கலிக்காமநாயனாருடைய எண்ணமாகிய பேறிதைப் பெற்றவராய்க் கேட்டு இப்பிழைக்குடன் படுவாராகி இதற்குப் பிராயச்சித்தத்தை வேண்டுபவராய்.

(௩கூ0) நாதரும் அதனைக்கேட்டு - சிவபெருமானுமதனைக் கேட்டு.

(௩கூ௧) எம்பிரானே, என்பிதா. அவர்பிதா, நம்முடையகிளைஞரெல்லாங் கடவுள் நீயே யென்று வழி வழி சார்ந்துவாழும் இவ்வுலகத்தில் மிக்க வாழ்க்கையையுடைய என்னை நின்று வருத்துஞ் சூலையைப் புதிதாக ஆண்டுகொண்டவனொருவன்வந்து தீர்ப்பான்.

(௩கூ௬) மதித்த மனதிற் பொருந்திய விருப்பத்தால்.

(௩கூஎ) சிவனருளாற் பொருந்துஞ் சூலையும் அவர் மாட்டுக் கேட்டகலக்க வார்த்தையும் மனத்தை வருத்த. அவர் மாட்டுக்கேட்டகேதமென்றது "சுந்தரனாலன்றி இந்நோய் நீங்காது" என்றதை.

(தொடரும்)

ஜி. சதாசிவம் பிள்ளை.

# புத்தகக்குறிப்பு.

ஜனநிர்மாணம்:—இப்பெயர்கொண்ட அரியநூலொன்று சென்னைச்சுதேசமித்திரன் ஆபீஸிலிருந்து எமக்கு அனுப்பப்பட்டுளது. இந்நூல், அனிபெஸண்டு அம்மையாரால் 1907—08, வருஷங்களில் சென்னையிற்செய்யப்பட்ட அரிய பிரசங்கங்களின் தமிழ் மொழி பெயர்ப்பு. ஜனநிர்மாணம், பொதுப்பான்மை, தேசத்துக்குற்ற கல்விமுறை, மதசம்பந்தமான கல்வியின் ஆவசியகம், யுகதர்மம், சர்வமத சகோதரத்துவம் கிழக்கும், மேற்கும், மானவரக்ஷகர் என்ற தலைப்பெயர்கொண்ட எட்டுப்பிரசங்கங்கள் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. நம் நாட்டைப்பற்றியும், நம் உயர்ச்சிக்குற்றவைகளைப்பற்றியும், நம் ஒழுக்க வழக்கங்களிலும் மனோபாவங்களிலுமுள்ள கொள்கைகளைப்பற்றியும தம நீண்ட அனுபவத்திற்கண்ட ஆழ்ந்த கருத்துக்கள்பல உலக சரித்திரத்துடன் பொருத்தி இவ்வம்மையாரால் உபந்யசிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்கொண்ட சித்தாந்தத்தை எண்ணிறந்த தக்க காரணங்களுடன் படிப்போர் நெஞ்சிற் பசுமரத்தாணிபோற் பதியும்வண்ணம் எடுத்துச் சொல்லும் மாட்சி மிகவியக்கத்தக்கது. இவ்வொரு நூலைப்படித்தலால், நாம் எண்ணிறந்த உண்மைகளை எளிதில் அறிந்துகொள்ளக்கூடுமென்பது திண்ணம். இவ்வரிய உபந்யாசங்கள் ஆங்கிலத்தில் நிகழ்த்தப்பெற்றவையாதலால், தமிழ்மக்கள் அவற்றின்சொற்சுவையை உள்ளபடியே அறிந்துகொள்ள இயலாமற்போயினும், ஏறக்குறைய அவற்றின் சொற்பொருட்சுவைகளை நம்மவர் அறிந்து மகிழும்வண்ணம் இம்மொழிபெயர்ப்புநூல் விளங்குகின்றது. இந்நூலை நமக்குபகரித்தவர் சென்னைச் சுதேசமித்திரன் பத்திராசிரியராய், தமிழ்நாட்டார் பொருட்டே தம்முடல்பொருளாவிகளை அர்ப்பித்துழைத்துவரும் ஸ்ரீமாந்-ஜி. சுப்பிரமணிய ஐயரவர்களே. இவர்கள், இந்நூற்கு எழுதிய முகவுரையில், இப்பிரசங்கங்களின் மாட்சியை உள்ளபடியே வியந்து பாராட்டியிருத்தலோடு, இவற்றைத்தாம் மொழிபெயர்த்தமைக்குற்ற காரணங்களையும் விளக்கியிருக்கின்றார்கள். இவர்கள் முன்பும் இத்தகைய அரிய உபந்யாசங்கள் பல மொழிபெயர்த்துதவியது பலரும் அறிந்தது. இவ்வரியநூல் ஞானவிருத்தியைவிரும்புவோரெல்லாரும் பெற்றுப்படித்தற்குரியதாதலால், இது நம்மவர்க்கு நல்விருந்தாயிருக்குமென்றே நம்புகிறோம்.

இதன் விலை ரூ 1.

பத்திராசிரியர்.

ஏனையபுத்தகங்களைப்பற்றி அடுத்தமுறை குறிப்பெழுதப்பெறும். ப—ர்.